விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 30 திங்கட்கிழமை (16.11.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 332




## தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு அரசாங்கத்துக்கு ஐ.நா.கடும் அழுத்தம்

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் மகிந்த ராஜபக்ஷ அரசு மீது கடுமையான அழுத்தங்களை மேற்கொள்வதற்கு ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கை அரசு மீது அதிக அழுத்தங்களைமேற்கொள்வதற்கு ஐ.நாவின் செயலாளர் நாயகம் பான்கீ மூன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரு கிறார். இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றத்தின் பின்னரான அவர்களின் பாதுகாப்பு மற்றும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு (14ஆம் பக்கம் பார்க்க)

## பவன தாழமுக்கத்தால் மழையுடன் கூடிய காற்று


(கொழும்பு)

நாட்டின் மேற்குத்திசையில் நிலை கொண்டுள்ள 'பவன' தாழமுக்கத்தால் இன்னும் ஒரு சில நாட்களுக்கு மழை நீடிக்குமென வளி மண்டல நிலையம் அறிவித்துள்ளது. இதேவேளை மழையுடன் கூடிய காற்று வீசும் வாய்ப்பு காணப்படுவதாகவும் வடபகுதி யிலும் இதன் தாக்கம் இருக்குமெனவும் வளிமண்டலத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ந)

## பொருத்தமான தருணத்தில் தேர்தல் அறிவிக்கப்படும்

# சர்வதேச அழுத்தங்களுக்கு நான் பயப்பட மாட்டேன்

## சிறிலங்கா சுதந்திரக் கட்சி மாநாட்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆவேசம்



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலையா, பொதுத் தேர்தலையா முதலில் நடத்துவது என்பதையும் அதற்கானதினம் பற்றியும் பொருத்தமான தருணத்தில் அறிவிக்கப்படும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (14ஆம் பக்கம் பார்க்க)

## அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரிய 30 இலங்கையர் நாடு கடத்தப்பட்டனர்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவில் அரசியல் புகலிடம் கோரிய 30 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த மாதம் கிறிஸ்மஸ் தீவுகளில் போராட்டத்தை நடத்திய நபர் ஒருவரையும் அவுஸ்திரேலியா நாடு கடத்தியுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் படகு மூலம் அவுஸ்திரேலியாவிற்குள் சட்டவிரோதமாக பிரவேசிக்க முனைந்த 50இலங்கையர்களில் சிலரே இவ்வாறு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

புகலிடம் கோரியவர்களில் 12பேருக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் அரசியல் தஞ்சம் வழங்கியுள் (14ஆம் பக்கம் பார்க்க)

## புலனாய்வுப் பிரிவுக்கு புதிய கட்டளை அதிகாரி

(கொழும்பு)

படைப்புலனாய்வுப் பிரிவின்புதிய கட்டளை அதிகாரியாக கேணல் அருணா வன்னியாராட்சி நியமிக்கப்பட்டுள்ளதாக படைத்தரப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது,

படைப்புலனாய்வுக் கட்டமைப்பின் கட்டளைஅதிகாரிமேஜர்ஜெனரல் அமால் கருணாசேகரா எரித்திரிய நாட்டுத் தூதுவராக நியமிக்கப்பட்டதைத் (14ஆம் பக்கம் பார்க்க)

## பொதுத் தேர்தலே முதலில் ஆங்கில ஊடகம் ஆருடம்

(கொழும்பு)

முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்திய பின்னர் பொதுத் தேர்தலை நடத்தும் அரசாங்கத் தின் திட்டத்தில் மாற்றம் ஏற்படுத்தப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

உரிய காலத்தில் நாடாளுமன்றத் தேர்தல்களை நடத்தி அதன் பின்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த அரசாங்கம் தீர்மானிக்க கூடுமென பிரபல ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் ஏப்ரல்மாதத்தில் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித் துள்ளது.

ஜே.வி.பி. உள்ளிட்ட சகல எதிர்க்கட்சிகளை எதிர்த்து ஜனாதிபதித் (14ஆம் பக்கம் பார்க்க)

## இராமாவில் முகாமில் உள்ளவர்கள் சொந்த இடங்களுக்கு அனுப்பப்படுவர்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் இராமாவில் நலன்புரி முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் புத்தளம் மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அடுத்த வாரம் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்படுவர் என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் தற்போது வன்னி மோதல்களால் இடம் பெயர்ந்தோரை தங்கவைப் பதற்காக கொடிகாமம் இராமாவில் நலன்புரி முகாம் மட்டுமே இயங்குகின்றது. இம்முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள (14ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் நடந்த போர்க்குற்றம் அமெரிக்கா மீண்டும் கரிசனை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையே வடக்குப் பகுதியில் நடைபெற்ற மோதல்களின் போது இடம் பெற்றதாக சுமத்தப்படும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் மீண்டும் அமெரிக்க கவனம் செலுத்திவருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

யுத்தக்குற்றச் செயல்கள் தொடர்பான பராக் ஒபாமாவின் விஷேட பிரதிநிதி ஸ்டீவன் ரெப்பின் நிலைப் பாடே இதற்குக் காரணம் என தெரி விக்கப்படுகிறது.

அண்மையில் தன்சானியாவில் படுகொலை செய்யப்பட் (14ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரப் பகிர்வை வழங்குவதில் அரசாங்கத்திற்கு உடன்பாடில்லை

## இரா.சம்பந்தன் குற்றச்சாட்டு



(கொழும்பு)

அதிகாரப் பகிர்வு தொடர்பில் அரசு எதி ரான போக்கையே கொண்டுள்ளது. சரியான தீர்வுத்திட்டத்தை கொண்டு வருவதில் அனை த்துக்கட்சிக் குழுவும் தோல்வி கண்டுள்ளதென தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார் கொழும்பிலிருந்து வெளிவரும் சண்டேரைம்ஸ் வார ஏட்டிற்கு அவர் வழங்கிய நேர்காணலிலே (02ஆம் பக்கம் பார்க்க)



## நாளைமுதல்...

தமிழகத்தின் பிரபல சோதிடர்

சிவல்புரி சிங்காரம்

எழுதும் கார்த்திகை மாதப் பலன் உங்களுக்கு எப்படி?

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

கல்வி அமைச்சின் ஆலோசகர் கலாநிதி நாகமுத்து தணிகாசலம்பிள்ளை அவர்களின் சேவை நயப்பு நூல்கள் வெளியீட்டு விழா நேற்று யாழ்.இந்துக் கல்லூரி குமார சுவாமி மண்டபத்தில் நடைபெற்றது. இவ் விழாவில் கலந்து கொண்ட கல்வியாளர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் கல்வி நிர்வாகம் எனும் நூலினை கலாநிதி மனோன் மணி சண்முகதாஸ் வெளியிட்டு வைக்க செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் பெற்றுக் கொள்வதையும் மற்றும் விழாவில் கலந்து கொண்டவர்களின் ஒரு பகுதியின ரையும் படங்களில் காணலாம்.

# அதிகாரப் பகிர்வை வழங்குவதில்...

அவர் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

அந்த நேர்காணலின் விபரம் வருமாறு,

கேள்வி:-இடம் பெயர்ந்த மக்களின் நல் வாழ்வு தொடர்பில் நீங்கள் அதிக அக்கறை செலுத்திவருகின்றீர்கள்.தற்போதைய மீள் குடியேற்ற நடவடிக்கைகளை எவ்வாறு பார்க் கிறீர்கள்?

பதில்:-இடம் பெயர்ந்த மக்கள் தொடர்பாக அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் தொடர் பில் நாம் திருப்தியடையவில்லை. மீள்குடி யேற்ற நடவடிக்கையை பொறுத்தவ ரையில் முகாம்களில் உள்ள மக்களை ஏற் றிச் சென்று எந்த வசதிகளும் அற்ற நிலை யில் அரசு கைவிட்டுள்ளது.அவர்களுக்கு உறை விடங்களோ அல்லது வருமானத்திற் கான வழிகளோ எதுவுமில்லை. அவர்களுக் குத் தொழில் வசதிகள் இல்லை.மீன்பிடித் தொழி லோ,விவசாயமோ மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். வவுனியா வில் வசித்த பலர் அம்பாறை, மட்டக்களப்பு, திருமலை, மன்னார் போன்ற பகுதிகளுக்கு அனுப்பப் பட்டுள்ளனர்.

கேள்வி:-தமது சொந்த இடங்களுக்குச் சென்ற மக்களுக்கு உரிய வகையில் நிவார ணங்கள் வழங்கப்படவில்லையென தெரி விக்கப்படுகிறது.அது தொடர்பில் உங்களது கருத்து என்ன?

பதில்:-ஆம்,பலர் தமது நண்பர்களு டனும்,உறவினர்களுடனும் வாழ்கின்றனர். அவர்கள் தமது வாழ்க்கையை தொடர்வ தற்கு 5ஆயிரம் ரூபா பணந்தான் வழங்கப் பட்டுள்ளது.தமது எதிர்காலம் என்ன என்பது தொடர்பில் அவர்கள் 'ஏக்கத்துடன் உள்ள னர்.சில குடும்பங்கள் தமது ஏனைய குடும்ப உறுப் பினர்களைக் காணாது வேதனைய டைந்துள்ளனர்.அவர்கள் தமது குடும்ப அங் கத்தவர்களைத் தேடிவருகின்றனர்.

கேள்வி:-இம்மாதம் நடைபெற்ற அவசர காலச் சட்ட நீடிப்புத் தொடர்பான விவாதத்தின் போது கிழக்கில் திட்டமிட்ட சிங்களக்குடியேற் றங்கள் நடைபெறுவதாக நீங்கள் குறிப்பிட்டது தொடர்பாக மேலதிகமாக கூறமுடியுமா?

பதில்:-இது ஒரு முக்கியமான விடயம். மட் டக்களப்பு.மற்றும் திருகோணமலை மாவட் டங்களில் இது நடைபெறுவதற்கான தகுந்த ஆதாரங்கள் என்னிடம் உண்டு. வெளியிடங் களில் இருந்து கொண்டுவரும் மக்களை அரசு அந்த மாவட்டங்களில் உள்ள கிராமங் களில் குடியமர்த்தி வருகின்றது.தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்தியதற்கு இதுவும் ஒரு காரணம். தற்போது விடுதலைப் புலிகள் இல்லை. எனவே மீண்டும் குடியேற்றங்கள் ஆரம்பித் துள்ளன.இது மேலும் போராட்டங்களுக்கு வழி வகுக்கும்.

கேள்வி:-இடம் பெயர்ந்த மக்கள் சந்தித்து வரும் நெருக்கடிகள் தொடர்பான விடயங்களில் அதிக அழுத்தங்களைக் கொடுத்து அதனை அனைத்துலக சமூகத்தின் முன் உங்கள் கட்சி கொண்டு சென்றுள்ளதா?

பதில்:-கொழும்பிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளை தொடர்ச்சியாகச் சந்தித்து மக்கள் எதிர்நோக்கும் இன்னல்கள் தொடர் பான தகவல்களைத் தெரிவித்து வருகின் றோம்.இடம் பெயர்ந்த மக்களின் நிலை தொடர்பாக இந்தியத்தலைவர்களுக்கும் இந்தியாவுக்கும் சென்று தெரிவித்திருந் தோம்.ஆனால் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்துவது அனைத்துலக சமூகத் தை விட இலங்கை அரசிற்கே அதிக பொறுப் புகள் உண்டு.

கேள்வி:-போர் நிறைவு பெற்று 5மாதங் கள் கடந்த நிலையிலும் அரசியல் தீர்வு தொடர்பாக எந்தத் திட்டங்களும் முன்வைக் கப்படவில்லை அது தொடர்பில் என்ன நடை பெறுகிறது.

பதல்:-அதிகாரப்பகிர்வு தொடர்பில் அரசு எதிரான போக்கையே கொண்டுள்ளது. சரி யான தீர்வுத்திட்டத்தை கொண்டு வருவதில் அனைத்துக் கட்சிக்குழுவும் தோல்வி கண் டுள்ளது.நாம் அரசின் தீர்வுத்திட்டத்திற்காக காத்திருக்கின்றோம். அவர்களிடம் ஏதாவது இருக்கின்றதா என்பது தொடர்பில் எமக்கு எதுவும் தெரியாது.

கேள்வி:-அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பேச்சுக்கழைத்திருந்தார் அதன் முடிபு என்ன?

பதில்:-நாம் இரண்டு கூட்டங்களுக்குச் சென்றிருந்தோம்.அங்கு எமது நிலைப்பாடு தொடர்பாக தெரிவித்திருந்தோம்.குறிப்பாக இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பாக பேசியி ருந்தோம்.அந்த மக்கன்ள அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பாதவிடத்தில் ஏதாவது முக்கியமான முடிபுகள் எட்டப்பட்டி ருக்குமென நான் எண்ணவில்லை.

கேள்வி:-புதிய கூட்டணி அமைப்பது தொடர்பில் தமிழ்க் கட்சிகளிடம் கலந்துரை யாடி வருகின்றீர்கள்.அது தொடர்பில் என்ன நடைபெறுகின்றது.

பதில்:-எல்லா தமிழ் பேசும் கட்சிகளுடனும் நாம் கலந்துரையாடி இருந்தோம் . நாம் அவர்களை ஒரு குடையின் கீழ் இணைப்பதற்கு விரும்புகின் றோம்.

குறைந்த பட்ச செயல்திட்டத் தை யாவது நாம் முயற்சிக்க வேண்டும். குறைந்த வேலைத்திட் டத்தை நடை முறைப் படுத்த நாம் முயற்சி செய்கிறோம்.ஒரு பொது வேலைத்திட்டத்தின் அடிப்படை யில் எல்லா தமிழ்க்கட்சிகளும் இணைக்கப்பட்டால் நாம் எமது மக்களின் உரிமைகளை வென்றெ டுக்கலாம்.எமது நிலத்தின் உரிமை களை பாதுகாக்கலாம் என நம்பு கின்றோம்.

கேள்வி:- கடந்த வாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சில உள்ளூர் அரசியல் உறுப்பி னர்கள் அரசில் இணைந் திருந்த னர். நாடாளுமன்ற உறுப்பினர் களில் இருவர் அரசில் இணைய லாம் என்ற பேச்சுகளும் உண்டு அது தொடர்பாக என்ன கூறவி ரும்புகிறீர்கள்?

பதில்:-அரசில் இணைந்து கொண்டவர்கள் மற்றும் இணைந்து கொள்வதற்கு விருப் பமுடையவர் கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது முடிபை எடுக் கும்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் நாம் பல புதிய முகங்களை அறிமு கப்படுத்தவுள்ளோம் எனத் தெரி வித்துள்ளார். (ந-5)

# வடக்கு மாகாண கலாசார விழாவை கொழும்பில் நடத்துவதென முடிபு

## கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன் அறிவிப்பு

(திருகோணமலை)

தேசிய மட்டத்தில் பிரபல்யமாகும் வகை யில் வடக்கு மாகாண கலாசார விழாவை கொழும்பில் நடத்துவ தென முடிபெடுக்கப் பட் டுள்ளதாக வடக்கு மாகாணக் கல்வி பண் பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய மட்டத்தில் பிரபல்யமடையும் வகையில் வடக்கு மாகாண கலாசார விழா வைக் கொழும்பில் நடத்துவதற்குத் தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

இதன்பொருட்டு ஆராய்வதற்காக நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திர சிறி தலைமையில்மாநாடுஒன்றுநடைபெற்றது.

இதில் யாழ்.அரச அதிபர் க.கணேஷ், யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், வடக்கு மாகாண கலா சாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி ஸ்ரீதேவி மற்றும் கலாசார உத்தியோ கத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இம் மாநாட்டில் மேற்படி தீர்மானம் எடுக் கப்பட்டது. இதன் மூலம் வடக்கு மாகாணக் கலைஞர்கள் தேசிய மட்டத்தில் தமது கலைத் தத்துவத்தை வெளிப்படுத்த முடியுமென வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல் கள் மற்றும் விளையாட்டுத்துறைச் செயலா ளர் இ.இளங்கோவன் குறிப்பிட்டார். (ந-5)

யாழ்ப்பாணம் கந்தர்மடம் ஸ்ரீ ஐயப்ப மணிகண்ட சபையின் 12 ஆம் ஆண்டு

மகர ஜோதி மண்டலப் பெருவிழா

இடம்:- கந்தர்மடம் ஸ்ரீ செட்டியந்தாழ்வ ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம்

காலம்:- கார்த்திகை 1-ம் நாள் 17.11.2009 செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணி

விடயம்:- விசேட அபிஷேகம், கணபதிஹோமம், ஐயப் பன் பூஜை, சுவாமிமார்களுக்கு மாலை அணிவித் தல், பஜனை, சத்தியமான பொன்னு 18 படிப் பூஜை தொடர்ந்து சக்தி பூஜை என்பன நடைபெறும். தொடர்ந்து 47 நாட்களுக்கு மு.ப.11.00 மணி முதல் இவ் வழிபாடு சிறப்புற நடைபெறும்.

இவ் விழாவில் அந்தணர்கள், சுவாமிமார்கள், கலைஞர்கள், அடியார்கள் அனைவரும் கலந்து சிறப்பித்து ஐயன் அருள் பெறுவீர்களாக!

இங்ஙனம்
சிவஸ்ரீ நா.பாலசுப்பிரமணியக் குருக்கள்
குருசுவாமி சிவஸ்ரீ நா.பாலஸ்கந்தரூப குருக்கள்
ஸ்ரீ ஐயப்ப மணிகண்ட சபை
கந்தர்மடம்.

(3934)

அன்பு வாசகர்களே!

உங்கள் வலம்புரியில் விவாத அரங்கு

வாசகர்களின் எண்ணங்களுக்கு வண்ணம் அமைக்கும் அரிய சந்தர்ப்பம். வாரந்தோறும் வாசிக்கவும் பங்குபற்றவும் தவறாதீர்கள்.

முதலாவது விவாத அரங்கில் :-

விவாதப் பொருள்:-
ஏழு வருடங்கள் ஒரே பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களின் இடமாற்றம்

நியாயமானதும் அவசியமானதும் ஆகும்.

அவசியமேயில்லை அதை நியாயப்படுத் தவும் முடியாது

உங்கள் கருத்துக்களை எழுதி (புகைப்படத்துடன்)

விவாத அரங்கு 01
வலம்புரி
இல.3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

என்னும் முகவரிக்கு இம் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வையுங்கள்.

## ஐ.ம.சு.கூ.–ஜே.வி.பி. பொதுச் செயலாளர்களுக்கிடையில் விசேட சந்திப்பு

ஐ.ம.சு.கூட்டமைப்பிற்கும் ஜே.வி.பிக்கும் இடையில் கடந்த வாரம் விசேட பேச்சு வார்த்தை இடம்பெற்றுள்ளது.

இப்பேச்சுவார்த்தையில் ஐ.ம.சு. கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேன, ம.வி.மு.பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா ஆகியோர் கலந்து கொண்டதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாகவும் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளவுள்ள அரசியல் விவகாரங்கள் தொடர்பாகவும் இப் பேச்சுவார்த்தையின் போது இரு பொதுச் செயலாளர்களுக்குமிடையில் விரிவாக ஆராயப்படுவதாகவும் இப்பேச்சு வார்த்தை இருவருக்கும் இடையில் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (6)

# இலங்கை விவகாரத்தில் ஐ.நா. மௌன கட்டுப்பாட்டை மேற்கொள்கிறது

## இன்னர்சிற்றி பிரஸ் தெரிவிப்பு

(கொழும்பு)


ஐ.நா.வின் மனிதாபிமான விவகாரங்களுக்கான தூதுவர் ஜோன் ஹோம்ஸ் இலங்கை விவகாரத்தில் இன்னும் ஈடுபாடு கொண்டிருந்தால் கடந்த புதன் கிழமை அவரின் உரையில் இலங்கை குறித்து எதுவும் கூறப்படாதமை ஏன் என இன்னர் சிற்றி பிரஸ் கேள்வி எழுப்பியுள்ளது.

ஐ.நா.மனிதாபிமான விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நாயகமும் அவசர கால நிவாரண இணைப்பாளருமான ஜோன் ஹோம்ஸ் நாளை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில் இக்கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இன்னர் சிற்றி பிரஸ் வெளி யிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது,

மெனிக் பாமில் சில முகாம்கள் அகற்றப்படுவதை பார்வையிடுவதற்கு வருமாறு ஐ.நா. மனிதாபிமான தூதுவர் ஜோன் ஹோம்ஸுக்கு இலங்கை அழைப்பு விடுத்திருந்தது. இலங்கையின் தூதுவர். பாலித கோஹண கடந்த புதன் கிழமை மாலை ஜோன் ஹோம்ஸும் அருகிலிருந்த நிலையில் ஆற்றிய உரையொன்றில் வரலாற்றில் மிக வேகமான மீள் குடியேற்றம் என அதை வர்ணித்திருந்தார்.

வவுனியா மெனிக்பாம் முகாமிலுள்ள மக்கள் மூடப்பட்ட ஏனைய முகாம்களுக்கு மாற்றப்படுவதாக அல்லது வெறுமனே காணாமல் போவதாக புதன்கிழமை மாலைவோஷிங்டன் போஸ்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. அக்கட்டுரை பல தவறுகளைக் கொண்டிருப்பதாக பாலித கோஹண இன்னர் சிற்றி பிரஸுக்குத் தெரிவித்தார்.



அன்றைய தினம் ஜோன் ஹோம்ஸ் ஆற்றிய உரையில் இலங்கை பற்றி எதுவும் குறிப்பிட வில்லை. மாறாக யேமன் பற்றி குறிப்பிடப்பட்டது. இலங்கை விவகாரத்தில் ஜோன் ஹோம்ஸ் இன்னும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளவர் என்றால் ஏன் இலங்கை பற்றி குறிப்பிடவில்லை?

விஜயம் மேற்கொள்ளப்படுவதற்கு ஐ.நா. மீண்டும் மௌனக் கட்டுப்பாட்டை மேற்கொள்கிறது. என சிலர் ஊகிக்கின்றனர். ஐ.நா. மௌனமாக இருந்தால் அது விஜயம் மேற்கொண்டு சில நன்மதிப்புகளை பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படும் போலும். (6)

## மாளிகா வத்தையில் தேசிய சிறுநீரக மாற்று மற்றும் குருதி வடிகட்டல் நிலையம்

## ஜனாதிபதியினால் திறந்து வைப்பு

(கொழும்பு)

இலங்கையில் வருடாந்தம் 700க்கு மேற்பட்ட சிறு நீரக நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது மதிப்பிடப்பட்டுள்ளவாறு குருதி வடிகட்டுதல் மற்றும் சீறுநீரக மாற்று சிகிச்சை மேற்கொள்ளும் தேவையுடைய சுமார் ஆயிரம் நோயாளர்கள் நாட்டில் இருப்பதாக அமைச்சு குறிப்பிடுகின்றது.

எனினும் இந்த நோயர்களில் சுமார் 250 பேர் வரை சுகாதார பராமரிப்பு நிலையங்களுக்கு வருகை தருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி தொடர்பாடல் அல்லது சிறந்த சுகாதார பழக்க வழக்கங்களை ஏற்படுத்திக்கொள்வதற்கு தேவையான வசதிகள் பெற்றுக் கொள்ளப்பட்ட போதிலும் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரித்துச் செல்கின்றமை குறித்து கூடுதல் அவதானம் செலுத்த வேண்டுமென சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் கடந்த 10 வருடங்களில் சிறுநீரகம் சார்ந்த நோய்கள் மிக வேகமாக பரவி வருவதாகவும் குறிப்பாக உரிய கார ணம் கண்டறியப்படாத ஒரு வகை சிறுநீரக நோய் வடமேல் ஊவா மாகாணங்களில் பதிவாகியுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த காலங்களில் அரசாங்க வைத்தியசாலைகளில் சிறுநீரக நோய்க்கான சிகிச்சைக்குத் தேவையான வசதிகள் போதிய அளவில் இல்லாமல் இருந்தது.

இதனை நிவர்த்தி செய்யும் வகையில் மாளிகாவத்தைப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தேசிய சிறுநீரக மாற்று மற்றும் குருதி வடிகட்டும் நிலையம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

110 கட்டில் வசதிகளைச் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ள இந்த வைத்தியசாலை 45 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (6-3)

## தமிழ் அகதிகள் இந்தோனேஷியாவில் தங்கியிருப்பதற்கு இணக்கம்

அவுஸ்திரேலியாவுக்குள் குடியேறும் முயற்சியாக பயணித்தவேளையில் பிடிபட்டிருந்த இலங்கை அகதிகள், இந்தோனேஷியாவின் மெரக் துறைமுகத்தில் ஒரு மரப் படகிலிருந்தும், வைக்கிங் ஓஷியானிக் என்ற அவுஸ்திரேலிய சுங்கத்துறை கப்பலில் இருந்தும் கடந்த ஒரு மாதகாலமாக இறங்க மறுத்து வருகிறார்கள்.

இந் நிலையல் தற்போது சிங்கப்பூரின் பிண்டான் தீவை ஒட்டிய கடற்பரப்பில் நிலை கொண்டுள்ள ஓஷியானிக் கப்பலில் உள்ள 78 தமிழ் அகதிகளில் இருபத்து இரண்டு பேர் கீழிறங்கி, தன்ஜுங் பினாங் பகுதியில் உள்ள இந்தோனேஷிய தடுப்புக் காவல் மையத்தில் தங்கியிருக்க சம்மதித்துள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆறுவார காலத்திற்குள் அவுஸ்தி ரேலியாவில் குடியேற இவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்று அவுஸ்திரேலியா உறுதி மொழி வழங்கியதை அடுத்து இந்த 22 பேர் கீழிறங்கியதாக அவுஸ்திரேலிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இவர்களை அவுஸ்திரேலியா அகதிகளாக ஏற்றுக்கொள்ளும் என்று கருதுவதாக அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிரிஸ் இவான்ஸ் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

## யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் அமெ. மீண்டும் கவனம் செலுத்தியுள்ளது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெற்ற மோதல்களின் போது இடம் பெற்றதாக சுமத்தப்படும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் மீண்டும் அமெரிக்கா கவனம் செலுத்தி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பான பராக் ஒபாமாவின் விசேட பிரதிநிதி ஸ்டீவன் ரெப்பின் நிலைப்பாடே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் தன்சானியாவில் படுகொலை செய்யப்பட்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உறவினரான சியாமல் ராஜபக்ஷவிற்கும் ஸ்டீவன் ரெப்பிற்கும் இடையில் மிக நெருங்கிய தொடர்பு காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சியாமல் ராஜபக்ஷவின் மேலதிகாரியாக ஸ்டீவன் ரெப் கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ராஜபக்ஷ சகோதரர்கள் தொடர்பில் சியாமல் ராஜபக்ஷவிடம் தாம் தகவல்களை திரட்டிக் கொண்டதாக ஸ்டீவன்ரெப் தெரிவித்துள்ளார். (6)


## UNIVERSITY OF JAFFNA TENDER NOTICE

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive scaled tenders from civil works contractors registered with ICTAD for the following work.

| Work Details | Refundable deposit(Rs.) | Non refundable deposit(Rs.) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|
| Re-construction of Kitchen of Hostel and Repairs / Improvements to related structures at Ramanathan Academy of Fine Arts, Maruthanamadam, University of Jaffna. | 20,000.000 | 400.00 | M7 / C8 |

Tender forms may be obtained from senior Assistant Registrar/ Capital Works & Planning University of Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the above tender fee at the Shroff's Counter, University of Jaffna until 23.11.2009.

Perfected tender should be sealed and marked with the job and the name of the work on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna, P.Box 57, Thirunelvely, Jaffna or deposited in the tender box kept at Registrar's Office, University of Jaffna.

Tenders will be accepted till 2.00 p.m on 27.11.2009 and open im mediately thereafter.

Tenderers or their accredited representatives could be present at the time of opening of tenders.

Tender forms may be inspected by the tenderers free of charge at the Capital Works & Planning Branch of this University during office hours, if necessary.

**P.O.Box 57,**
**Thirunelvely,**
**Jaffna.**
**13.11.2009.** (C/3728)

**Registrar,**
**University of Jaffna.**




ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் நா.ஞானகுமாரன், கல்லூரி அதிபர் ஆறுதிருமுருகன், கல்லூரியின் முன்னாள் அதிபர் க.சிவாஜி, பழைய மாணவர் சங்கத் தலைவர் மு.பரமநாதன், பிரதி அதிபர் சி.மகேந்திரன் ஆகியோர் உரைநிகழ்த்துவதையும், மேடையில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

## ஒளிவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் ஒளிவிழா இன்று காலை 10 மணிக்கு பாடசாலை நாகேந்திரராஜா மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (6-4-29)




## மூளாய் -முன்கோடை தேவாலய வீதியை புனரமைத்து தருமாறு கோரிக்கை

(பொன்னாலை)

மூளாய்- காளிகோயிலுக்குமுன்பாகச் செல்லும் முன்கோடை தேவாலய வீதி கடந்த 40 வருடங்களுக்கு மேலாக திருத்தம் செய்யப்படாமல் இருந்து வருவதாக அப்பகுதி மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

பாரிய குன்றும் குழியும் கிரவலுமாகக் காணப்படும் இவ் வீதியில் மாரிகாலங்களில் மக்கள் பயணஞ் செய்வதில் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த வீதியில் தேவலாயம், சிறுவர் முன்பள்ளி மற்றும் குடியிருப்புகள் என்பன காணப்படுவதால், ஆலயம் செல்வோர், மாணவர்கள்,தொழிலாளர்கள்,பொதுமக்கள் எனத் தினமும் நூற்றுக்கணக்கானோர் இவ் வீதியைப் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இவ் வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு வலி.மேற்கு பிரதேச சபை மற்றும் வலி.மேற்கு பிரதேச செயலகம் போன்றவற்றிடம் பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்த போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது. (6-49)

## ஐயப்ப விரத திருவிளக்குப் பூசை

நயினாதீவு மலையிற்புலம் ஸ்ரீ மலையின் ஐயனார் ஆலய ஐயப்ப விரத மண்டல பூசை உற்சவம் நாளை செவ்வாய் கிழமை ஆரம்பமாகி டிசம்பர் 27ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் நாளை செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு ஐயப்ப சுவாமிக்கு அஸ்டோத்திர 108 சங்காபி ஷேகமும் தீபாராதனைகளும் அதனைத் தொடர்ந்து 18 படி திருவிழக்குப்பூசையும் நடைபெறும்.

தொடர்ந்து 40 நாட்களும் தினமும் மாலை 3 மணிக்கு அபிடேகம் , தீபாரா தனை, பஜனை, 18 படிதிருவிளக்குப்பூசை என்பன இடம்பெறும். இதேவேளை அடியார்க ளின் நலன் கருதி நயினாதீவு இறங்கு துறையில் இருந்து விசேட பேருந்து சேவை ஒழுங்கு செய்யப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-4)

## வயல் நிலங்களில் களைபிடுங்கும் நடவடிக்கைகள் மும்முரம்

(பொன்னாலை)

வலி.மேற்கு மற்றும் வலி.தென்மேற்கு பிரதேசங்களிலுள்ள நெல் வயல்களில் களை பிடுங்கும் நடவடிக்கைகள் மும்முரமாக இடம் பெற்று வருகின்றன.

தற்போது பெய்துவரும் பருவகால மழையையடுத்து வயல் நிலங்களில் நீர் நிறைந்து காணப்படுகின்றது.

இந்நிலையிலேயே களைபிடுங்கும் நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. சில பள்ள வயல் நிலங்களில் அளவுக்கதிகமாக நீர் தேங்கி நிற்பதால் நெற்பயிர்கள் அழிவடைந்து போயிருப்பதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே, மழை இல்லாத வேளையில் புழுதியில் விதைக்கப்பட்ட நெல்மணிகள் எல்லாம் முளைக்காது போயிருக்கும் நிலையில் மீளவும் விதைக்கப்பட்டு தற்போது முளைத்த பயிர்களும் அழிவடைந்திருப்பது தமக்கு மிகுந்த வேதனையைத் தருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (6-49)

## வருடாந்த மகரஜோதி மண்டல விரத மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சபரீச ஐயப்பன் தேவஸ்தானத்தின் வருடாந்த மகரஜோதி மண்டல விரத மஹோற்சவம் நாளை செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது.

புனிதமாலை அணிதலைத் தொடர்ந்து 60 தினங்கள் இம் மஹோற்சவத்தில் எதிர் வரும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி வியாழக் கிழமை கொடியேற்றமும், 16ஆம் திகதி புதன்கிழமை 4மணிக்கு மகிஷி வேட்டைத் திருவிழாவும், 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவமும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும், 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பூங்காவனமும் ,மாலை திருவூஞ்சலும், 26ஆம்திகதி சனிக்கி ழமை மாலை நெய்த்தேங்காய்,நெய் நிரப்புதலும், 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இருமுடி கட்டி 18 ஆம் படியேறி விசேட படிப்பூசை, மண்டலபூசையும், 28 ஆம் திகதி திங்கட் கிழமை அதிகாலை நெய் அபிஷே கமும் இடம்பெறவுள்ளதுடன் மஹோற்சவ காலங்களில் தினமும் காலை கணபதி ஹோமமும், மாலை அபிஷேகமும் பூசை,பஜனை, படிப் பூசை, ஹரிவராகனம் நடைசாத்துதல் ,சக்தி பூசை ஆகியனவும் இடம்பெறும்.

அத்துடன் ஜனவரி மாதம் 6ஆம் திகதி ஐயப்பன் ஜெயந்தியும்,14 ஆம் திகதி வியாழக்கிழமை மகரஜோதி விழாவும் இடம்பெறவுள்ளது.மாலை அணியும் ஐயப்பன் சுவாமிகள் ஆலயத்தில் முன்கூட்டியே பெயர்களை பதிவுசெய்யவேண்டுமெனவும் அனைத்துப் பூசைப் பொருட்களும் ஆலய காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் ஆலய குருசாமி தெரிவித்துள்ளார். (6-4)

## சார்க் இளைஞர் விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் இயற்கை அனர்த்தங்களின் போது மனித நேயச் செயற்பாடுகளில் ஈடுபட்டு சாதனை படைத்த இளைஞர்களுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இவ் விருதுக்கு தெரிவு செய்யப்படுபவர்களுக்கு சார்க் தங்கப்பதக்கமும், 3ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான பணப் பரிசும், வழங்கப்படுவதோடு விருது வழங்கும் இடத்திற்குப் போய் வருவதற்கான விமானச் சீட்டுக்கான கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது.

இதற்கான வயதெல்லை 20 தொடக்கம் 35 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ் விருதுக்குத் தகுதியுடைய நல்லூர்ப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்டவர்கள் நல்லூர் பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உதவியாளரிடம் விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் நல்லூர் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் கேட்டுக்கொள்கின்றார்.

மேலும் இவ்விண்ணப்பப்படிவத்தினை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் www.slmfa.gov.lk எனும் இணையத்தள முகவரியில் " SAARC Youth Award 2009" எனும் தலைப்பின் கீழ் பார்வையிடலாம். (ஓ-6)

## நாயன்மார் நால்வர் வீதியுலா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருமுறை மன்றம் நாட்டு மக்கள் சாந்தி, சமாதானத்தோடு நிம்மதியாக வாழவேண்டி பிரார்த்தித்து திருவாவடுதுறை ஆதீனம் வழங்கிய நாயன்மார் நால்வரை வீதியுலாவாக எழுந்தருளச் செய்து ஆலயங்களில் பன்னிரு திருமுறை முழுவதும் முற்றோதி வருகிறது.

இந்த வகையில் இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு திருநெல்வேலி கிழக்கு அருள்மிகு வெள்ளைப் பிள்ளையார் ஆலயத்தில் ஆலயப்பூசையைத் தொடர்ந்து ஏழாம் திருமுறை முற்றோதல் நிறைவு செய்து பூசை,வழிபாடுகள் நடைபெற்று மாலை 5.30 மணிக்கு அழகிய சுந்தர முத்துப் பல்லக்கில் நாயன்மார் நால்வர் திருமுறைச் சுவடிகள் குடை, கொடி, ஆலவட்டம் , மங்களவாத்தியம், திருமுறைப் பாராயணத்தோடு வெள்ளைப் பிள்ளையார் வீதி, கல்வியங்காட்டுச் சந்தி, புதியசெம்மணி வீதி ஊடாக சரித்திர பிரசித்தி பெற்ற நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தைச் சென்றடைந்து டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி வரை தினமும் காலை 7.30 மணிக்கு பூசை வழிபாடுகள் நடைபெறும்.

ஆலயப் பூசையைத் தொடர்ந்து 8 ஆம் திருமுறை,திருவாசகம், திருக்கோவையார் முற்றோதல் என்பன நடைபெறவுள்ளது.

ஆலய அறங்காவலர்களின் அனுசரணையுடன் நடைபெறும் இந்நிகழ்வில் அனைவரும் பங்குபற்றி பயன்பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

## தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வு நாளை மறுதினம் புதன்கிழமை நூலக மண்டபத்தில் பிரதேச சபை செயலாளர் வே.சிவராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (6-4-29)




சாவகச்சேரியில் புதிதாக அமைக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப் பட்ட ஆதார வைத்தியசாலையின் புதிய கட்டடத்தை படத்தில் காணலாம்.

# நாடும் மக்களும்

53

ஒவ்வொரு மெய்க்காப்பாளருக்கும் ஆண்டொன்றிற்கு 600 முதல் 1000 வராகன் வரையில் ஊதியம் கொடுக்கப் பெற்றதென பீயஸ் கூறியுள்ளார். பேரரசின் சேவையில் இருந்த படை தலைமை அதிகாரி ஆண்டிற்கு ரூ.47,000 ஊதியம் பெற்றார். மற்றையோர்க்கு இல்லாத பல சிறப்புரிமைகளையும் பெற்றிருந்தார். ஓர் சாதாரண படைவீரனுக்கு மாதம் ஒன்றிற்கு நான்கு முதல் ஐந்து வராகன்கள் ஊதியமாகக் கிடைத்ததென டேம்ஸ் (Dames) என்பார் கூறுவர்.

இன்றைய ரூபாய் கணக்கில் பார்த்தால் ரூ.22.8க்கும் ரூபாய் 28க் கும் இடையில் கிடைத்தது. இவ்வாறு பெற்ற ஊதியங் களினால் பல பொருட்களையும் சேவைகளையும் பெற்று, இராணுவ வீரர்கள் அரசாங்கத்தின் செல்வப் பிள்ளைகளாக வாழ்ந்தனர் என்று கூறலாம். (போர்க் காலங்களில் மாத்திரம் சேகரிக்கப் பெற்ற நிலமானியப் படைகளின் எண்ணிக்கை சற்று அதிகமாகவே இருந்தது) விஜயநகரப் படைகளில் இந்துக்களோடு முஸ்லிம்களும் சேர்த்துக்கொள்ளப் பெற்றனர். பேரரசின் பல பகுதிகளில் இஸ்லாமியர்களுக்கென பல வசதிகள் தரப்பட்டு சேனையில் அமர்த்திக்கொள்ளப் பெற்றனர்.

அவர்களுக்கு சமய வழிபாட்டுரிமையும் நிலமானியங்களும் அளிக்கப்பெற்றன. கிருஷ்ண தேவராயர் காலத்தில் நடந்த இராய்ச்சூர் போரில் இஸ்லாமிய வீரர்களே முன்னணியில் விளங்கினர் என இராபர்ட் சிவெல் கூறியுள்ளார்.

நகர் காவல் புரியபொலிஸ் பட்டாளங்களும் விஜயநகரத்தில் இருந்தன. இரண்டாம் தேவராயர் காலத்தில் பன்னிராயிரம் பொலிஸ்காரர்கள் நகரத்தைப் பாதுகாத்ததாக அறிகிறோம். பொலிஸ் படைகளை அடக்கியாளுவதற்கு பெயில் (Bailiff) என்ற தனியதிகாரி இருந்தார். எல்லைப்புறங்களில் காவல் தொழில் ஈடுபட்டவர்களுக்கு காவல்காரர்கள் என்ற பெயர் வழங்கியது.

நிலமானியமும் கிராம மக்கள் கொடுக்கும் சில ஊதியங்களையும் அவர்கள் அடைந்தனர். கிராமங்களில் பாடிகாவல் அதிகாரம் பெற்ற தலையாளி என்ற ஊழியர் பொலிஸ் கடமைகளைச் செய்துவந்தார்.

### கலைஞர்களும் கல்வியில் வல்லவர்களும்

விஜயநகரப் பேரரசர்கள் கல்வியில் வல்ல அறிஞர்களையும், கலைச்செல்வங்களையும் போற்றி ஆதரித்தனர். முற்காலத்தில் இப்பொழுதுபோல் வழக்கறிதல், கல்வி

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

போதனை, செய்தித்தாள் தொழில், நூலாசிரியர்கள் என்ற தெளிவான பாகுபாடுகள் இல்லை. மத்தியகால இந்தியாவில் கல்வி, சமயத்தோடு பிணைக்கப்பட்டிருந்தமையால் தனித்தனி துறைகளில் சிறப்பெய்திய கல்வியாசிரியர்கள் கிடையாது. ஆயினும் பல துறைக் கல்வியில் சிறப்புற்ற அறிஞர்கள் பலர் வாழ்ந்தனர். இலக்கியம், இதிகாசம், புராணங்கள் முதலியவற்றில் வல்ல பல அறிஞர்கள் குருகுல முறையில் மாணவர்களுக்குப் போதனை செய்தனர். அரசர்களும் சிறந்த கல்விமான்களை ஆதரித்து அவர்களுக்குத் தகுந்த பதவிகளையும் சன்மானங்களையும் அளித்தனர்.

அறிவில் சிறந்தவர்களுக்கு சதுர்வேதி மங்கலங்கள் அளிக்கப்பட்டன. சைவ, வைணவ ஆலயங்கள் சிறந்த கல்விக்கூடங்களாகத் திகழ்ந்தன. ஆலயங்களில் வேதங்களும், ஆகமங்களும், மெய்ப்பொருள் நூல்களும் போதிப்பதற்குத் தகுந்த ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பெற்று நிலமானியங்களும் கொடுக்கப் பெற்றன. விஜயநகர் ஆட்சியில் நிலைபெற்றிருந்த மடாலயங்கள் சிறந்த கல்வி நிலையங்களாத் திகழ்ந்தன. சோதிடம், வானநூல், மருத்துவம் முதலிய கலைகளில் வல்லவர்களை அரசர்கள் ஆதரித்தனர். தேவாலயங்கள் கல்விச் சாலைகளாகவும், அறச்சாலைகளாகவும், மருத்துவ மனைகளாகவும் விளங்கி மக்களுடைய உடலுக்கும் உயிருக்கும் உறுதி பயக்கும் சேவைகளைச் செய்தன. இசை, நாட்டியம், சித்திரக் கலை, சிற்பக்கலை, கட்டடக்கலை முதலிய அருங்கலைகளைப் போற்றி வளர்த்த தொழில்களும் நிலைபெற்றிருந்தன. விஜயநகர ஆட்சிக்காலத்தில் அமைக்கப் பெற்ற தேவாலயங்கள், அரண்மனைகள், கோட்டைக் கொத்தளங்கள் நீர்ப்பாசன அமைப்புக்கள் முதலியவை இடிந்து கிடக்கும் நிலைமையில் இருந்தாலும் அவைகள் அமைக்கப்பெற்ற காலத்தில் அருங்கலைகளுக்கு அரசாங்கம் அளித்த ஆதரவை எடுத்துக்காட்டுகின்றன.

இவ்விதக் கலைத்தொழில்களில் ஈடுபட்டிருந்தவர்களுடைய உற்சாகத்தை அவர்களுடைய கைவண்ணங்களே காட்டுகின்றன. சித்திரக்கலையில் வல்லவர்களுக்கு அரசர்கள் உதவியளித்ததினால் அக்கலை செழிப்புற்று வளர்ந்தது. இசையும் பரதநாட்டியமும் ஆதரவு பெற்றன. இவ்விரு கலைகளிலும் வல்ல பெண்மணிகள் தங்களுடைய இளமையிலிருந்து இக் கலைகளைக் கற்று அவற்றின் கருவூலங்களாக விளங்கினர். தேவாலயங்களில் பணியாற்றிய தேவரடிகள், பதியிலார் பெண்களும், ஆண்களும் இக் கலைகளைப் போற்றி வளர்ப்பதில் தங்களுடைய வாணாளைக் கழித்தனர். பரதநாட்டியத்திற்கென தனியரசர்களும் நிலைபெற்றிருந்தன. விஜய்நகர அரசர்கள் சிற்பக்கலைய்யைப் போற்றிய விதத்தை அக்காலத்தில் அமைக்கப் பெற்ற தேவாலயங்களிலும் கோபுரங்களிலும் , மண்டபங்களிலும் நாம் இன்றும் காணலாம்.

கல்வெட்டு எழுத்துக்களை எழுது வதில் வல்லவர்களின் கை வன்மையை அவர்களால் எழுதப்பெற்ற கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் காணலாம். பதினாறாம் நூற்றாண்டிற்கு முன்னர்கோவில் மதிற்சுவர்களே ஆவணக் காப்பகங்களாக விளங்கின. அச்சுத் தொழில் உண்டாவதற்கு முன் கல்வெட்டுக்களும் செப்பேடுகளுமே சிறந்த நூலகங்களாகத் திகழ்ந்தன.

வைதிக நெறிப்படி சமய வாழ்க்கையில் ஈடுபட்ட முனிவர்களும், யோகிகளும், மடாலயத் தலைவர்களும், மக்களை நல்வழிப் படுத்துவதற்கெனவே தங்களுடைய வாணாளைக் கழித்தனர்.

சிறந்த வேதாகம விற்பன் னர்களாகவும், மெய்ப்பொருள் ஞானிகளா கவும், சித்தர்களாகவும் திகழ்ந்தனர். மடாலயங்கள் செல்வம் நிறைந்தனவாக இருந்தன. தேவாலயங்களில் சேவை செய்த அந்தணர் களும் புரோகிதர்களும் மக்களுடைய இம்மை மறுமை வாழ்விற்கு நல்வழி காட்டினர். கேள்வியாளர், கணக்கர், மெய்க்காவல்காரர், குருக்கள் பொற்பண்டாரம், திருவிளக்கு ஏற்றுவோர், மேளக்காரர், குடை, கொடி, பிடிப்போர் என்ற தொழிலாளிகள் கோவில்களில் பலவிதமான அலுவல்களைப் பார்த்தனர்.

### வணிகர்கள் அல்லது வியாபாரிகள்

விஜயநகரப் பேரரசின் தொடக்கத்திலிருந்து இந்துக்களும், இஸ்லாமியர்களும் வணிகத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். பின்னர் போர்த்துக்கீசியர், டச்சுக்காரர்,

கலாநிதி
**தெ.வே.மகாலிங்கம்**

ஆங்கிலேயர் முதலியோர் பேரரசின் வாணிபத்தில் பங்குகொண்டனர். அரேபியாவிலிருந்து குதிரைகளை இறக்குமதி செய்து வியாபாரம் செய்வதில் போர்த்துக்கீசியர் பங்குகொண்டனர். இந்துக்களில் செட்டியார்கள் வணிகத்துறையில் பெருமை பெற்றனர். சில அந்தணர்களும் வியாபாரம் செய்தனர். போக்குவரத்து தொழிலில் பலர் ஈடுபட்டிருந்தனர். (தொடரும்)

---

## தமிழ் மக்களையும் ஊடகங்களையும் அச்சுறுத்தும் நோக்கிலேயே திஸ்ஸநாயகத்திற்கு தண்டனை விதிக்கப்பட்டது

### கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண

(கொழும்பு)

தமிழ் மக்களையும், ஊடகங்களையும் அச்சுறுத்தும் நோக்கிலேயே சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜே.எஸ். திஸ்ஸநாயகத்திற்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதாக புதிய இடதுசாரி முன்னணிக்கட்சியின் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் திஸ்ஸ நாயகத்திற்கு வழங்கப்பட்ட இருபது ஆண்டு சிறைத் தண்டனை தமிழர்களின் தனித்தன்மையை பேணிப் பாதுகாப்பதற்கு அவர்மேற்கொண்ட முயற்சிகளுக்காக வழங்கப்பட்டதொன்றென அவர் குறிப்பிட்டுள்ளார்.

திஸ்ஸநாயகத்தை விடுதலை செய்யுமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கில் ஊடக நிறுவனங்கள் இணைந்து மேற்கொண்ட நிகழ்வில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சிலவேளைகளில் திஸ்ஸநாயகத்தை விடுதலை செய்யக்கூடிய ஓர் சந்தர்ப்பமும் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் மக்களையும், ஊடகங்களையும் அச்சுறுத்தும் நோக்கில் திஸ்ஸநாயகத்திற்கு தண்டனை வழங்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (6-4)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 9 இற்கு வரலாறு (புதிய பாடத்திட்டம்) கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (6-4-19)

ஜி.எஸ்.பி. வரிச்சலுகைத்திட்டம் கோரி

## ஐரோப்பா சென்ற சர்வதமதக்குழுவினால் எவ்வித வெற்றியும் கிட்டவில்லை

### சிங்கள ஊடகம் தெரிவிப்பு

(கொழும்பு)


இலங்கைக்கு ஜீ.எஸ்.பி.வரிச்சலுகைத் திட்டத்தை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் ஐரோப்பாவிற்கு விஜயம் செய்த சர்வமதக் குழுவினர் வெறும் கையுடன் நாடு திரும்பியுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வரிச்சலுகையை மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கும் நோக்கில் சர்வமதக் குழுவினர் முக்கிய ஐரோப்பிய நாட்டுப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

எனினும், இந்தப் பேச்சுவார்த்தைகளில் எவ்வித வெற்றியும் கிட்டவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பிய நாடுகளில் இலங்கை தொடர்பான நிலைப்பாட்டை இந்த விஜயத்தின் மூலம் அறிந்துகாள்ள முடிந்ததாக சர்வமதக் குழுவின் பிரதிநிதியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

வரிச்சலுகைத் திட்டம் மறுக்கப்பட்டால் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6)



கொக்குவில் இந்துக்கல்லூரியின் விஞ்ஞான விழாவும் "சாரதி" நூல் வெளியீடும் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் மங்கல விளக்கேற் றுவதையும், அருகில் கல்லூரி அதிபர் அ.அகிலதாஸ், "சாரதி" நூலின் இதழா சிரியர் செல்வன் த.கிரிகரன், பொறுப்பாசிரியர் ந.கந்தவ்னச்செல்வன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# கிழக்கு மாகாணத்தில் தமிழர் வாழும் பகுதிகளில் சட்டவிரோத குடியேற்றங்கள்

## பிரதேச செயலர் உறுதிப்படுத்தி ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் பரந்து வாழும் பிரதேசங்களிலுள்ள அரச காணிகள் பலாத்காரமாக பிடிக்கப்பட்டு அங்கு சட்ட விரோதக் குடியேற்றங்கள் இடம்பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கச்சக் கொடி கிராமசேவகர் பிரிவில் கெவுளியாமடு கிராமத்தில் 170 சட்டவிரோத குடியிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளதாக மண்முனை தென் மேற்கு பிரதேச செயலகம் உறுதிப்படுத்தி ஜனாதிபதியின் உதவிச் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ்ப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் சட்ட விரோத குடியேற்றங்கள் தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார்.

இதனையடுத்து ஜனாதிபதியின் உதவிச் செயலாளர் கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கும் கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

குறிப்பிட்ட மூன்று அரசாங்க அதிபர்களும் இந்த விவகாரம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென ஜனாதிபதியின் உதவிச் செயலாளர் கடிதம் மூலம் கேட்டிருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே மண் முனை தென்மேற்கு பிரதேச செயலகம் மட்டு. மாவட்ட அரசாங்க அதிபருக்கு தரவுகளை சமர்ப்பித்துள்ளதுடன் இதன் பிரதியொன்று ஜனாதிபதியின் உதவிச் செயலாளருக்கும் அனுப்பி வைத்துள்ளது. (6)

# ஜெனரல் சரத்பொன்சேகாவின் இடத்திற்கு எயார் சீப் மார்ஷல் ரொஷான் குணதிலக்க?

(கொழும்பு)

கூட்டுப் படைகளின் முன்னாள் தலைமை அதிகாரி ஜெனரல் சரத் பொன்சேகா கடந்த வியாழக்கிழமை அப்பதவியை இராஜினாமா செய்ததையடுத்து அப்பதவிக்கு விமானப் படைத்தளபதி எயார் சீப் மார்ஷல் ரொஷான் குணதிலக்க நியமிக்கப்படவுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் கூட்டுப் படைகளின் தலைமை அதிகாரி பதவியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு தனக்கு சந்தர்ப்பம் வழங்குமாறு ஜெனரல் சரத்பொன்சேகா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கேட்டிருந்தார்.

ஆனால் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அவர் ஓய்வு பெற்றுக்கொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எயார் சீப் மார்ஷல் ரொஷான் குணதிலக்கவின் பெயருக்கு மேலதிகமாக இப்பதவிக்கு மேஜர் ஜெனரல் சுமித் பாலசூரிய, மேஜர் ஜெனரல் எம்.ஏ.ரணசிங்க ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதும் சிரேஷ்ட உறுப்பினர் என்ற வகையில் எயார் சீப் மார்சல் ரொஷான் குணதிலக்கவுக்கே இப்பதவி வழங்கப் படவுள்ளதாகவும் அரச்சாங்க வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (6)

# கருத்துக்கணிப்புக்களின் பிரகாரம் சரத்பொன்சேகாவிற்கு அதிக ஆதரவு

(கொழும்பு)

கருத்துக் கணிப்புக்களில் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு அதிக ஆதரவு காணப்படுவதாக இருதின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் முன்னணி ஆங்கில இணையப் பத்திரிகைகளில் நடத்தப்பட்டு வரும் கருத்துக் காணிப்புக்களை மேற்கோள் காட்டி இந்த செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடுவதற்கு ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கு தகுதியுள்ளதா? மற்றும் ஜெனரல் சரத்பொன்சேகாவினால் ஊழல் மோசடிகளை ஒழிக்கக முடியுமா? என்ற ரீதியிலும் இந்தக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த இரண்டு கருத்துக் காணிப்புகளிலும் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவாகவே மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (6-4)

# அகதிகள் நிலைமை குறித்து ஆராய த.தே.கூ. இன்று வன்னி விஜயம்

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று இன்று திங்கட்கிழமை வவுனியா செட்டிகுளம் மெனிக்பாம் அகதி முகாமுக்குச் செல்கிறது.

இதற்கான அனுமதியை பாதுகாப்பு அமைச்சு வழங்கியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

15 பேர் கொண்ட பெயர்ப்பட்டியல் ஒன்றை பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பிவைத்ததாகவும் அதன்படி அங்கு செல்ல அனுமதி கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இன்று காலை இரத்மலானை விமானப் படை விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு வவுனியா விமானப் படைத்தளத்தை சென்றடைந்ததும் அங்கிருந்து முதலில் மன்னாருக்கு ஹெலிகொப்டர் மூலம் அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளை பாதுகாப்பு அமைச்சு செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அங்கு குடியேற்றப்பட்ட மக்களை சந்திப்பதுடன் பின்னர் கிளிநொச்சிக்குச் சென்று மீள் குடியேறியுள்ள மக்களைச் சந்திப்பதுடன் பயணத்தின் இறுதியாக தாம் வவுனியா செட்டிகுளம் பகுதியிலுள்ள மெனிக்பாம் நிவாரணக் கிராமங்களுக்கும் செல்லவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (6)


வடபிராந்திய முச்சக்கரவண்டி ஊர்தி சேவை சங்கம்

ஆட்டோ உரிமையாளர் சாரதிகளுக்கான அறிவித்தல்

யாழ். பட்டினப்பகுதியில் சேவை செய்யும் ஆட்டோ உரிமையாளர் சாரதிகள் இன்று (16.11.2009) தொடக்கம் யாழ். போக்குவரத்து பொலிஸாரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி சேவை செய்ய முடியாது என்பதையும் தரிப்பிடங்களில் தரித்து நிற்க எக்காரணம் கொண்டும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதனையும் தெரியப்படுத்துகின்றோம்.

வடபிராந்திய முச்சக்கரவண்டி ஊர்தி சேவை சங்கம்,
முனீஸ்வரன் வீதி,
யாழ்ப்பாணம்.

(3932)



வேலை வாய்ப்பு

இணையுங்கள் உங்கள் வாழ்க்கையை வெற்றியாக்க. யூனியன் அஷ்யூரன்ஸ் மிகப் பெரும் வர்த்தக நிறுவனங்களின் ஒன்றான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் PLC யின் பலத்தினதும் உறுதிப்பாட்டினதும் பின்னணி ஆதரவுடன் இயங்கும் இலங்கையில் 22 வருட காலம் காப்புறுதித் துறையில் சேவையாற்றி வரும் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாகும்




யாழ். மாவட்ட கிளைக்கான பதவி வெற்றிடங்கள்

காப்புறுதி ஆலோசகர் → பதவி - 1
பதவி - 2 தனிப்பட்டோர் நிதி ஆலோசகர்
பதவி - 3 சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி ஆலோசகர்
தனிப்பட்டோர் நிதி முகாமையாளர் பதவி - 4
சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி முகாமையாளர் பதவி - 5




அடிப்படைத் தகைமைகள் :-

⚜ க.பொ.த. (சா/த) கணிதம் உட்பட 6பாடங்களில் சித்தி ⚜ காப்புறுதித் துறையில் முன் அனுபவம் உடையவர்கள் விரும்பத்தக்கது ⚜ கல்வித் தகைமையுடன் விளையாட்டுத்துறையில் திறமையுள்ளவர்கள்

தகைமையுடன் நாம் உங்களிடம் எதிர்பார்ப்பது

⚜ உங்களது இலக்கை அடைவதற்கான உறுதியான மனோ நிலை ⚜ உங்கள் வெற்றியை நோக்கிப் பணிபுரிவதற்கான ஆர்வம் ⚜ திடசித்தம்




ஏன் தயக்கம்? தோற்றுங்கள் நேர்முகத் தேர்வுக்கு

காலம் :- புதன்கிழமை (18.11.2009)
நேரம் :- மு.ப. 9.30 மணி
இடம் :- யூனியன் அஷ்யூரன்ஸ்
இல. 139, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

யூனியன்ஸ் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்

G.சிறீவரதன்
விற்பனை முகாமையாளர்
077 3039582

(C-3709)

# இன்று ஒரு தகவல்

## சார்லி சாப்ளின்

ஒரு அம்மா மேடையில் பாடிக்கொண்டிருந்தார். அதை ஐந்து வயதுச் சிறுவன் ஒருவன் கீழே இருந்து பார்த்துக்கொண்டிருந்தான்.

அந்த அம்மாவின் பிள்ளை இவன்.

தன் தாயார் பாடுவதைத்தான் எல்லோரோடும் சேர்ந்து இவன் கேட்டுக்கொண்டிருந்தான்.

ஒரு கட்டத்தில் அந்த அம்மாவுக்குத் தொண்டை கட்டிக்கொண்டது. அவரது குரல் ஒத்துழைக்கவில்லை.

அதனால் அவரால் தொடர்ந்து பாட முடியவில்லை.

தன் தாயாரால் பாடமுடியவில்லை என்பதை இந்தச் சிறுவன் புரிந்து கொண்டான்.

உடனே ஓடிச் சென்று மேடையில் ஏறி இடையில் நின்று போன பாடலைத் தொடர்ந்து பாட ஆரம்பித்தான்.

பார்த்துக்கொண்டிருந்தவர்கள் எல்லோரும் அப்படியே அசந்து போய்விட்டார்கள். அவ்வளவு பிரமாதமாகச் சிறுவன் பாடினான். ரசிகர்கள் மத்தியில் ஒரே மகிழ்ச்சி ஆரவாரம்.

அவர்கள் மேடையை நோக்கி காசுகளை வீச ஆரம்பித்தார்கள்.

மேடையில் காசுகள் விழுவதைப் பார்த்த சிறுவன் திடீரென்று பாடுவதை இடையில் நிறுத்திவிட்டு, " கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கள். இந்தக் காசுகளைப் பொறுக்கிக் கொள்கிறேன்.

அதன்பின் தொடர்ந்து பாடுகிறேன்" என்று சொல்லி விட்டுக் குனிந்தான்.

அவனது அந்தச் செயலைப் பார்த்து சவட்டத்தில் ஒரே சிரிப்பு...எல்லோரும் கைதட்டிச் சிரிக்க ஆரம்பித்தார்கள்.

இதுதான் அவன் முதல் தடவையாக மக்களைச் சிரிக்க வைத்த நிகழ்ச்சியாகும்.

அதன்பின் 88 வயுதில் அவன் இறக்கும் வரை மக்களைச் சிரிக்க வைத்துக்கொண்டேயிருந்தான்.

அந்த மாபெரும் கலைஞன் தான் சார்லி சாப்ளின்.

1931 இல் பேசாத திரைப்படங்கள் வந்து கொண்டிருந்த காலம். அவற்றில் வசனம் இருக்காது. காட்சிகள் மூலமே கருத்தைச் சொல்ல வேண்டியிருந்தது.

அந்தக்கால கட்டத்தில் நகர விளக்குகள்(The City Lights) என்று ஒரு படம் வெளிவந்தது.

அதில் ஒரு காட்சி இப்படி அமைந்திருந்தது.

ஒரு நகரத்தில் சிலைத் திறப்புவிழா நடைபெற ஆயத்தமானது. அந்தச் சிலையைத் திறந்து வைப்பதற்கு நகர மேயர் வருகிறார்.

அந்தச் சிலையை ஏற்கனவே ஒரு பெரிய போர்வையால் மூடி வைத்திருந்தார்கள். மேயர் வந்து சிலையை மூடியிருந்த போர்வையை எடுக்கிறார். சிலையின் மடியில் படுத்திருந்த ஓர் ஏழை குளிரில் நடுங்கிய படியே இறங்கி ஓடுகிறான். அது சார்லி சாப்ளின். காட்சி அவ்வளவு தான். வசனம் எதுவுமில்லை. இருந்தாலும் அக்காட்சி தெரிவிக்கும் கருத்து என்ன தெரியுமா?

" இந்த நகரத்தில் இருக்கும் ஏழைக்குக் குளிருக்குப் போர்வையில்லை. ஆனால் உயிருடன் இல்லாத ஒரு பெரிய மனிதனுக்குச் சிலை... அதற்குப் போர்வையா? " இதுதான் அவர் சொல்லிவந்த கருத்து.

அந்தக்காலத்தில் பேசாமல் முகபாவத்தின் மூலமாகவே சமுதாயப் புரட்சிக் கருத்துக்களை மக்கள் மனதில் பதிய வைத்தவர் சார்லி சாப்ளின்.

இயற்கையாகவே குள்ளமான உடற் தோற்றம் உடைய சார்லி சாப்ளின் தொளதொளவென ஒரு பாண்ட் அணிந்திருப்பார். தலையில் உயரமான தொப்பி, கையில் வோக்கிங் ஸ்ரிக், கோணலான நடை...இதுதான் சார்லி சாப்ளின்.

பிற்காலத்தில் அவரது நடை, உடை, பாவனைகளைப் பின்பற்றி பலர் நடிக்க ஆரம்பித்தார்கள்.

ஒருசமயம் சார்லி சாப்ளின் ஒரு விழாவுக்குச் சென்றிருந்தார். அங்கு மாறுவேடப் போட்டி நடந்துகொண்டிருந்தது. 'சார்லி சாப்ளின்' மாதிரி வேடம் போட்டு நடித்துக் காட்ட வேண்டும் என்பதுதான் அங்கு நடந்துகொண்டிருந்த போட்டி.

அந்தப் போட்டியில் சார்லி சாப்ளினும் கலந்த கொண்டாராம். அதில் அவருக்கு மூன்றாவது பரிசுதான் கிடைத்ததாம். இதிலிருந்து எப்போதுமே அசலை விட நகலுக்குத் தான் வரவேற்பு அதிகம் என்பது புரிகிறதல்லவா?

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மாற்று ஆற்றலுள்ளோர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட வலய மட்ட போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய விசேட கல்வி அலகினால் மாற்று ஆற்றுலுள்ளோர் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட வலய மட்டப் போட்டி முடிவுகள்வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**பேச்சு**

*பிரிவு 1*

பு.பிரக்சனா (பன்னாலை சேர் கனகசபை), ச.மதுகரி பண்ணாகம் மெய்கண்டான்), செ.சிவபாலன் (அராலி முருகமூர்த்தி).

*பிரிவு 2*

வி.ஷீசுபாங்கி(வட்டு மத்திய கல்லூரி), த.டன்சிகா (மகாஜனாக் கல்லூரி), த.கேதினி (பிரான்பற்று கலைமகள்).

*பிரிவு 3*

ஹீமாதங்கி (வட்டு மத்திய கல்லூரி), இ.கஜீபன்(மகாஜனாக் கல்லூரி), பா.கோபிகா (பண்ணாகம் மெய்கண்டான்).

**கட்டுரை**

*பிரிவு 1*

நீ.லக்சனா (பண்டத்.தரிப்பு யசிந்தா),த.ஜெயதரன் (மகாஜனாக் கல்லூரி), ஜெ.அளராதை (பண்ணாகம் மெய்கண்டான்).

*பிரிவு 2*

ற.அப்றாயினி(பண்ணாகம் மெய்கண்டான்), க.றாதிகா (வட்டு இந்துக் கல்லூரி) மூன்றாமிடம் இருவர் சி.சங்க நிதி (ஏழாலை சைவ மகாஜனா), நா.நிறோஜினி (மானிப்பாய் சென்ஆன்ரனிஸ்)

*பிரிவு 3*

த.காயத்திரி (வட்டு மத்திய கல்லூரி), த.சுபசுஜனி( வட்டு இந்துக் கல்லூரி), க.தனுசியா)குப்பிளான் விக்னேஸ்வரா).

**தனி இசை**

*பிரிவு 1*

செ.டக்சன்( சங்கரத்தை சின்னம்மா), ம.பெரிசியா (பண்டத் தரிப்பு பெண்கள் கல்லூரி), இ.சுகந்தி (வட்டு மத்திய கல்லூரி)

*பிரிவு 2*

தி.யக்சன்( கந்தரோடை தமிழ் கந்தையா), ப.பகீரதன் (மயிலிட்டி வடக்கு கலைமகள்), பு.மதீசன் (வட்டு இந்துக் கல்லூரி)

*பிரிவு 3*

சி.நிஸாயினி(வட்டு மத்திய கல்லூரி), ட.டெசிந்தா(சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி), சி.அனோஸ்ரியன்(மல்லாகம் வித்தி.)

**குழு இசை**

*பிரிவு 1*

அராலி இந்துக் கல்லூரி, பண்டத் தரிப்பு பெண்கள் உ.த, சண்டிலிப்பாய் இந்து.

*பிரிவு 2*

அருணோதயாக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி), மகாஜனாக் கல்லூரி

*பிரிவு 3*

வட்டு இந்துக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியா, இராமநாதன் கல்லூரி.

**தனிநடனம்**

*பிரிவு 1*

ஜெ.ஜெனுசியா (பண்டத்தரிப்பு பெண்கள்),நி.சன்சிகா(ஏழாலை சிறீ முருகன் வித்தி.), சு.விதுசியா (இணுவில் இந்து)

*பிரிவு 2*

தி.மேரிசாலினி(பண்டத்தரிப்பு மகளிர்), ப.அபிராமி (இணுவில் இந்து), க.யசோதா(இளவாலை கன்னியர்).

*பிரிவு 3*

மேரிஜான் றொபேக்கா (பண்டத் தரிப்பு பெண்கள்),கா.சர்மியா (மல் லாகம் ம.வி.), அ.சுகன்யா ( இளவாலை கன்னியர்மடம்)

**குழு நடனம்**

*பிரிவு 1*

பண்டத்தரிப்பு பெண்கள், இணுவில் இந்து, ஏழாலை மேற்கு சன்மார்க்க வித்தி.,

*பிரிவு 2*

இளவாலை கன்னியர்மடம், பண்டத்தரிப்புபெண்கள்,வட்டு இந்து., மகாஜனாக் கல்லூரி.

*பிரிவு 3*

பண்டத்தரிப்பு பெண்கள்,வட்டு இந்துக் கல்லூரி, ஏழாலை சிறீ முருகன்.


**திறந்த போட்டி**

*நாடகம்*

இளவாலை மெய்கண்டான், பண்டத்தரிப்பு பெண்கள், வட்டு இந்துக் கல்லூரி

*வில்லிசை*

வட்டு இந்துக்கல்லூரி. (6)




வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் ஆசிரியர் தின நிகழ்வில், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற கல்லூரி மாணவன் லோ.ஸ்ரீகர்சனுக்கு கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரன் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும்,அருகில் உப அதிபர் ஏ.சி.பிரான்சிஸ் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# இராசி பலன்

16.11.2009
(ஐப்பசி 30 திங்கட்கிழமை)
அமாவாசை பின்னிரவு 1.23 மணிவரை
சுவாதி காலை 6.15 மணிவரை
இராகுகாலம் 7.37-9.07 மணிவரை
சுபநேரம் 12.07-1.37 மணிவரை
அமாவாசை விரதம்

| | |
|---|---|
| மேடம் | திடீர் பயணம்,நண்பர்கள் சந்திப்பு, முயற்சிகைகூடும், விருந்துபசாரம். |
| இடபம் | சத்துருஜெயம், காரிய அனுகூலம், உடல்நலம், பண வருவாய். |
| மிதுனம் | வியாபார நன்மை, வேலைச் சுமை, சிறுவியாதி, முயற்சிதாமதம். |
| கடகம் | பயந்தசுபாவம், நண்பர்கள் சந்திப்பு, நல்லமுயற்சி, ரோக நிலை. |
| சிங்கம் | இனிய சம்பவம், கூட்டுமுயற்சி, புதிய பொருள்சேர்க்கை, உற்சாகம். |
| கன்னி | கடினவார்த்தை, தனவிரயம், குடும்பக்கவலை,ஆரோக்கியக் குறைவு. |
| துலாம் | சிந்தனைமிகுதி, பெரியோர் சந்திப்பு, போசனசுகம், நல்ல முயற்சி . |
| விருச்சிகம் | தந்தைவழி உறவு, உணர்ச்சி வசப்படல், தனவிரயம்,சயன சுகக் குறைவு. |
| தனுசு | பொருள்சேர்க்கை, மனமகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு, கீர்த்தி. |
| மகரம் | தொழில்முன்னேற்றம்,சுப நிகழ்வு, நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும். |
| கும்பம் | ஆன்றோர் சந்திப்பு, உடல் உழைப்பு, அச்சமான நிலை, திடீர் பயணம். |
| மீனம் | எதிர்பாராத அச்சம், போசன சுகம், பிறருக்கு உதவுதல், வீண்பகை. |

**வளவன்**

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 85 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 60 |
| தக்காளி | 75 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 50 | 60 | 50 |
| கரட் | 70 | 80 | 80 |
| பூசணி | 15 | 30 | 30 |
| புடோல் | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 100 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 80 |
| கரணைக் கிழங்கு | 40 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 90 | 120 | 40 |
| லீக்ஸ் | 120 | 160 | 120 |
| பீற்றூட் | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 80 | 100 | 100 |
| கீரை - 1 பிடி | 25 | 30 | 25 |
| தேசிக்காய் | 170 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |

# ஈழத்தமிழர்களின் வாழ்வை சித்தரிக்கும் ‘ஈழம் மௌனத்தின் வலி’ புத்தகம் வெளியீடு

## சென்னையில் சத்குரு ஜக்கி வாசுதேவ் வெளியிட்டார்



(சென்னை)

சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்றவிழாவில், ஈழத்தமிழர்களின் நிலை பற்றிய புத்தகத்தை சத்குரு ஜக்கி வாசுதேவ் வெளியிட்டார்.

ஈழத்தமிழர்களின் வாழ்வை சித்தரிக்கும் “ஈழம் மௌனத்தின் வலி” என்ற புத்தக வெளியீட்டு விழா சென்னை எழும்பூர் டான் பாஸ்கோ மேல்நிலைப்பள்ளியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இந்த விழாவில் சத்குரு ஜக்கி வாசுதேவ், பேராயர் சின்னப்பா, நடிகர்கள் சிவகுமார், பிரகாஷ்ராஜ், சூர்யா, இயக்குநர் ஏ.ஆர். முருகதாஸ், “நக்கீரன்” கோபால் ஆகியோர் கலந்து கொண்டு, குத்துவிளக்கு ஏற்றி வைத்து விழாவை தொடங்கி வைத்தனர்.புத்தகத்தை சத்குரு ஜக்கி வாசுதேவ் வெளியிட, பேராயர் சின்னப்பா, நடிகர்கள் சிவகுமார், பிரகாஷ்ராஜ் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

நிகழ்ச்சியில் நக்கீரன் கோபால் பேசுகையில் கூறியதாவது,

இலங்கை அதிபர் ராஜபக்ஷவும் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவும், தமிழர்களின் அழிவுக்குக் காரணமானவர்கள்.தமிழர்கள் பொங்கி எழுவார்கள் என்று பொன்சேகா கூறு கிறார். அவர் அதிபர் தேர்தலில் போட்டியிடப் போகிறார். நாம் எல்லாவற்றையும் மறந்து விட்டோம். இது தான் நம்முடைய இழிவு நிலைக்குக் காரணம். தமிழர் களைக் கொன்று குவித்ததை மறந்துவிட முடியுமா?

20 ஆண்டுகளுக்கு மேலாக விடுதலைப் புலிகளுக்கு இங்கே தடை இருக் கிறது.தடையை வாங்கி தந்த வரோடு சேர்ந்துகொண்டு, அவர் காலடியில் அமர்ந்து கொண்டு தனி ஈழம் வாங்கி தருவோம் என்று இங்கே சொல்கிறார்கள். நாம் எல்லாவற்றையும் மறந்து விடக்கூடாது. தமிழினத்திற்காக தொடர்ந்து குரல்கொடுக்க வேண்டும். இவ் வாறு அவர் கூறினர்.

இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸ் பேசுகையில் கூறியதாவது, கார்கில் போர்வீரர்களுக்காக குரல்கொடுத்து அவர்களுக்காக நிதியுதவிக்காக புறப்பட்டவர்கள் தமிழர்கள். இந்தியாவில் எந்தச் சம்பவம் நடந்தாலும் முதலில் குரல்கொடுப்பவர்கள் தமிழர்கள். ஆனால் இங்கே ஒரு இனம் அழிகிறது. இதைத் தடுக்க எப்படி குரல் எழுப்புவது என்றே எனக்குத் தெரியவில்லை. தரையில் முட்டிஅழ வேண்டும் போல் இருக்கிறது.தமிழர்களின் ஒற்றுமையின்மையால் தான் நாம் அழிந்து கொண்டு வருகிறோம்.இனியாவது நாம் ஒற்றுமையாக இருந்து இந்தக் கொடுமைகளைத் தடுக்க வேண்டும் என்றார்.

நடிகர் பிரகாஷ்ராஜ் பேசுகையில், ஒரு மானை வேட்டையாடினால் தண்டிக்க சட்டம் இருக்கிறது.போராட அமைப்பும் இருக்கிறது. ஆனால் மனிதர்களை வேட்டையாடி கொல்கிறார்களே இதை தடுக்க சட்டம்இல்லையா? பெரியவர்களைக் கொல்லக் காரணம் பல சொல்லலாம். ஆனால் குழந்தைகளை கொல்லக் காரணம் சொல்லமுடியுமா? இதை இப்படியே விட்டுவிட முடியாது என்றார்.

“ஈழம் மௌனத்தின் வலி” என்ற இந்தப் புத்தகத்தை ஆங்கிலப் பத்திரிகை யாளர்கள் அருந்ததிராய் ,அனிதா பிரதாப், சத்குரு ஜக்கிவாசுதேவ்,பேராயர் சின்னப்பா, நடிகர்கள் கமல்ஹாசன், சூர்யா, பிரகாஷ் ராஜ், சத்தியராஜ், நடிகை நந்திதாதாஸ், இயக்குநர்கள் சீமான், சேரன்,அமீர்,பாலாஜி சக்திவேல், பாலா, ஏ.ஆர்.முருகதாஸ், மிஸ்கின், கே.வி. ஆனந்த்,லிங்குசாமி, ராதாமோகன், கவிஞர்கள் வைரமுத்து, இன்குலாப், அப்துல் ரகுமான், மு.மேத்தா,அறிவுமதி, கனிமொழி, தாமரை, தமிழச்சி, கபிலன், நா.முத்துக்குமார், பா.விஜய், தபூ சங்கர், யுகபாரதி, கலாப்ரியா, கல்யாண்ஜி , ஈரோடு தமிழன்பன், கல்வியாளர்கள் அனந்தகிருஷ்ணன், வசந்திதேவி உட்பட நூறுபேர் ஆசிரியர்களாக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# இலங்கை பெண் பயணியின் 150 பவுண் நகை மாயம்?

(சென்னை)

இலங்கையில் இருந்து சென்னை வந்த பெண் தான் கொண்டு வந்த 150 பவுண் நகைகளை காணவில்லை என்று புகார் செய் துள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள் ளது.

இலங்க்கயைச் சேர்ந்தவர் திலகராணி ரத்னம் (35) கடந்த சில நாட்களுக்கு முன் லண்டன் சென்ற இவர் பின் இலங்கை வழி யாக நேற்று முன்தினம் சென்னை திரும்பி னார். தன்னுடன் இரண்டு சூட்கேஸ்களை எடுத்து வந்தார். விமான நிலையத்தில் நடந்த வழக்க மான சோதனைகளை முடித்துக் கொண்டு சென்னை தி.நகரில் உள்ள வீட் டிற்கு சென்றார். அங்கு பெட்டிகளை திறந்து பார்த்த போது அவர் எடுத்து வந்த நகைகளை காணவில்லை என்று கூறப்படுகிறது.

இது குறித்து விமான நிலைய பொலிஸாரிடம் கொடுத்துள்ள புகார் மனுவில் இலங்கையில் இருந்து நான் 150 பவுண் நகை களை எடுத்துவந்தேன். வீட்டில் சென்று பார்த்த போது சூட்கேசில் வைத்திருந்த நகை களை காணவில்லை. நகைகளை கண்டு பிடித்து தர வேண்டுகிறேன். என்று கூறப்பட் டிருந்தது.விமான நிலைய பொலிஸார் அந்த மனுவை பெற்று விசாரணை நடத்தி வருகின் றனர்.

இச்சம்பவம் குறித்து பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில் முதலில் 150 கிராம் நகைகளை காணவில்லை என்றார். பின் மனுவில் 150 பவுண் நகைகளை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நகைகள் மாயமானது இலங்கையிலா சென்னையிலா என்று தெரியவில்லை இருப்பினும் பெண் பயணி அளித்த மனு குறித்த விசாரணை நடந்து வருகிறது என்றார். (6)

# இலங்கைக்கு இந்தியா இராணுவ உதவியளித்தமை அம்பலமாகியுள்ளது

## பழ.நெடுமாறன் தெரிவிப்பு



(சென்னை)

மத்திய அரசின் தமிழர் விரோதப் போக்கை தமிழக மக்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும் என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது குறித்து கடந்த சனிக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில்,

இலங்கையில் போர் இறுதிக் கட்டத்தை எட்டியிருந்தபோது அங்குள்ள தமிழ் மக்களை காப்பாற்றுவதற்காக மத்திய அரசு உடனடியாக தலையிட வேண்டும் என்று தமிழக மக்கள் ஒன்றுபட்டு வலியுறுத்தியபோது இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிட முடியாது என்று பிரதமர் மறுத்தார்.

இந்த நிலையில் இலங்கை இராணுவப் புரட்சி ஏற்படும் அபாயம் இருப்பதாகவும் தனது ஆட்சியைக் காப்பாற்ற இந்தியப் படையை அனுப்புமாறும் மத்திய அரசுக்கு இலங்கை அதிபர் ராஜபக்ஷ விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க கடந்த ஒக்டோபர் 15ஆம் திகதி இந்தியப் படை ஆயத்த நிலையில் வைக்கப்பட்டிருந்தது. என்று இலங்கை கூட்டுப்படைத் தளபதி பொன்சேகா இப்போது பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளார்.

ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டபோதும் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் தொடர்ந்து சுட்டுக்கொல்லப்பட்டபோதும் இராணுவ ரீதியாக தலையிட மறுத்த மத்திய அரசு ராஜபக்ஷவை காப்பாற்ற இராணுவத்தை ஆயத்த நிலையில் வைத்தது.என்ற செய்தி தமிழர்களை அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளது.

மேலும் இலங்கக்கு இராணுவ ரீதியாக உதவி எதுவும் செய்யவில்லை என்று தொடர்ந்து மறுத்து வரும் மத்திய அரசு தான் கொடுத்த இரு போர்க் கப்பல்களை திரும்பக்கேட்டுள்ளது. என்ற செய்தியும் இந்திய அரசின் உண்மை உருவத்தை அம்பலப்படுத்தியுள்ளது.

எனவே தமிழக மக்கள் இனியாவது மத்திய அரசின் தமிழர் விரோதப் போக்கை அடையாள்ம் கண்டுகொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# சீனாவில் கடும் பனிப்பொழிவு; 40 பேர் பலியாகியுள்ளனர்

(பீஜிங்)

சீனாவில் கடும் பனிப்புயல் மற்றும் பனிப்பொழிவுக்கு 40 பேர் பலியாகியுள்ளனர். சீனாவின் வடக்கு மத்திய பகுதியில் கடும் பனிப்பொழிவும் பனிப்புயலும் வீசுகிறது. இந்த பனிப்பொழிவால் ஹெபீ மற்றும் ஹெனான் மாகாணங்களில் கடந்த மூன்று நாட்களில் வீடுகள் பல இடிந்து விழுந்து 21 பேர் பலியாகியுள்ளனர்.

இது மட்டுமின்றி பனிப்புயலால் பல இடங்களில் வாகனங்கள் விபத்துக்கு உள்ளாகி 19 பேர் பலியாகியுள்ளனர்.

வழக்கத்திற்கு மாறான இந்தப் பனிப் புயலால் விமானப் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டதோடு 80 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் பல வகையில் பாதிக்கப்பட்டுள்ளனர். 1,60 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இது மட்டுமின்றி 3, 300 கோடி ரூபாய் மதிப்புள்ள பயிர்களும் சேதமடைந்துள்ளன சீன தலைநகர் பீஜிங்கிலும் கடும் பனிப்பொழிவு காணப்படுகிறது. இருந்தாலும் யாரும் இறந்ததாக தகவல் இல்லை. (6)

# நிலவில் தண்ணீர் உள்ளது

## நாசா தகவல்

(வோஷிங்டன்)

இந்தியாவின் சந்திரயானைத் தொடர்ந்து, அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையமும், நிலவில் தண்ணீர் இருப்பதை உறுதி செய்துள்ளது. எதிர்பார்த்ததை விட அதிக அளவில் தண்ணீர் இருப்பதாக நாசா கூறியுள்ளது.

நிலவுக்கு இந்தியா சார்பில் அனுப்பி வைக்கப்பட்ட சந்திரயான் விண்கலம், நிலவில் தண்ணீர் இருப்பதற்கான மூலக்கூறுகள் இருப்பதை கடந்த சில மாதங்களுக்கு முன் கண்டுபிடித்தது.

இதையடுத்து, அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசாவும், இதற்கான முயற்சிகளில் இறங்கியது. நிலவின் மேற்பரப்பில் ரொக்கெட்டை மோதச் செய்து, அதனால் ஏற்படும் பள்ளங்களில் தண்ணீர் உள்ளதா எனக் கண்டறியும் சோதனையை கடந்த மாதம் 9 ஆம் திகதி நாசா மேற்கொண்டது.

இதில் தண்ணீர் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதுகுறித்து, நாசாவைச் சேர்ந்த அந்தோணி கொலாபிரட் கூறுகையில், “ நிலவின் மேற்பரப்பில் ஏற்பட்ட 20 முதல் 30 மீற்றர் வரை ஆழமுள்ள பள்ளங்களில் நாங்கள் எதிர்பார்த்ததை விட, குறிப்பிடத்தக்க அளவில் அதிக தண்ணீர் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது முதல்கட்டமாக கிடைத்த தகவல் தான். ஆய்வு முடிவுகள் இன்னும் எதிர்பார்க்கப்படுகின்றன என்றார்.

நாசா அதிகாரிகள் கூறுகையில், நிலவில் தண்ணீர் இல்லை.அது ஒரு வறட்சியான பிரதேசம் என நீண்டகாலமாகக் கூறப்பட்டு வந்தது. தற்போது அங்கு தண்ணீர் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது உண்மையில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது மேலும் பல ஆய்வுகள் மேற்கொள்ள உதவும் என்றனர். (6)

# பன்றி காய்ச்சலை விரட்டும் இஞ்சி, மஞ்சள்

## ரஷ்ய மருத்துவர்கள் தகவல்

(மொஸ்கோ)

பன்றிக்காய்ச்சலுக்கு இஞ்சி, மஞ்சள், சீரகம் போன்றவை நல்ல மருந்தாகப் பயன்புடுகின்றன என ரஷ்ய மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

மெக்சிக்கோ நாட்டில் ஆரம்பித்த பன்றிக் காய்ச்சல் உலகம் முழுவதும் பரவிக் கொண்டிருக்கிறது.ஆயிரக்கணக்கானவர்கள் இந்த நோய்க்கு பலியாகியுள்ளனர்.

தற்போது,ரஷ்யா மற்றும் அதன் அண்டை நாடான உக்ரைனில், இந்த நோய் பரவி வருகிறது. இந்த நாட்டு மக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முககவசம் அணிந்து செல்கின்றனர்.


நறுமணப் பொருட்களான இஞ்சி,மஞ்சள் பூண்டு, சீரகம் போன்றவை மருத்துவ குணம் வாய்ந்தவை.



இவற்றை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்வதன் மூலம் பன்றிக் காய்ச்சல் அண்டாது என ரஷ்ய மருத்துவத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (6)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் வெள்ள அனர்த்தங்களுக்கான வாய்ப்புக்களும் வெள்ள அழிவுகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளும்

இயற்கை அனர்த்த முகாமைத்துவத்தில் குறைவாக்கல் வட்டமும் முக்கியமான விடயமாகக் காணப்படுகின்றது. குறைவாக்கல் வட்டம் என்பது தயார்படுத்தல் (Preparedness), பொறுப்பெடுத்தல் (Response), மீளமைத்தல் (Recovery), குறைத்தல்(mitigation) என்னும் நான்கு விடயங்களை அடிப்படையாகக் கொண்டது.




குறைவாக்கல் வட்டத்தில் தயார்படுத்தல் எத்தகைய அனர்த்தம் ஏற்படும் போதும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகத் தயார்படுத்தலைக் குறிக்கும். இத்தயார்ப்படுத்தல் என்பதில் அனர்த்தம் ஒன்றின்போது மக்களை வெளியேற்றல் , பாதுகாப்பான இடமொன்றில் தங்கவைத்தல், தேவையான வசதிகளை மேற்கொள்ளல், மீள் வாழ்க்கைக்குத் திரும்பும்வரை அவ்விடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுதல் என்பதனைக் குறிக்கும். பொறுப்பெடுத்தல் (Response) அனர்த்தம் ஒன்றின்போது பாதிக்கப்பட்ட மக்களை மீட்பு நிவாரண மற்றும் புனர்வாழ்வு புனரமைப்பு முறைகளை மேற் கொள்வதற்கு ஒவ்வொரு தனி நபரும், அமைப்புக்களும் (அரசு, அரச சார்பற்ற) பொறுப்பெடுப்பதனைக் குறிக்கும். இத்தகைய பொறுப்பெடுத்தல் என்பது ஒவ்வொரு துறை சார்ந்த வேலைகளையும் ஒவ்வொரு அமைப்புக்களையும் பொறுப்பெடுப்பதனைக் குறிக்கும். இலங்கைப் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கையின்படி இலங்கையில் தேசிய மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும், அனர்த்த காலங்களின்போது பொறுப் பெடுக்க வேண்டிய அமைப்புக்கள் பட்டியல்படுத்தப்பட்டுள்ளன. அந்தவகையில் பின்வரும் அமைப்புக்கள் காணப்படுகின்றன.

1. தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் (NCDM)
2. மாவட்ட செயலகம்
3. மாவட்ட முகாமைத்துவ மத்திய நிலையம் (DMC)
4. பிரதேச செயலகம்
5. மாநகர சபை, பிரதேச சபை போன்ற உள்ளூராட்சி அமைப்புக்கள்
6. பொலிஸ்
7. ஆயுதப்படையினர்
   1. தரைப்படையினர்
   2. விமானப்படையினர்
   3. கடற்படையினர்
8. சமூக நிறுவனங்கள்
9. வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி திணைக்களம்
10. மின்சார சபை
11. ஸ்ரீ லங்கா டெலிக்கொம்
12. தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை
13. பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை
14. சமூகசேவைகள் திணைக்களம்

மீளமைத்தல் என்பது அனர்த்தம் ஒன்றின் போது பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீளமைத்தலைக் குறிக்கும். இதில் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, தொடர்பாடல், வாழ்வாதாரம் போன்ற அனைத்துத் துறைகளையும் மீளமைப்பதனைக் குறிக்கும்.

மேற்கூறிய தயார்ப்படுத்தல், பொறுப்பெடுத்தல், மீளமைத்தல் என்பற்றின் ஒழுங்குமுறையான நடவடிக்கையின் ஊடாக அனர்த்தத்தினைக்குறைக்க முடியும் என்பதனைத் தடுத்தல் (mitigatiom) குறிக்கின்றது. இவை ஒரு வட்டவடிவில் தொழிற்படுகின்றன. மேற்கூறிய நடவடிக்கைகளின் போது அவை

2008 ஆம் ஆண்டின் நிஷா புயலின் போதான வெள்ள அனர்த்தப் படம்



மதிப்பீடும் முக்கியமானதாகும். (Risk Assessment) இதனைப் பின்வரும் சமன்பாட்டின் மூலம் கணித்துக் கொள்ளலாம்.

Rh =hxrh

Rh=hazand specific Risk (அழிவை ஏற்படுத்தக்கூடிய இடர்)

h= Probability (இடர் நிகழும் சாத்தியப்பாடு)

vh = Level ofimpact of specific Hazard (இடரால் ஏற்படும் தாக்க மட்டம்)

இத்தகைய அபாய மதிப்பீடு மீளமைத்தல் என்பதனுள் அடங்கும். புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் போன்றவற்றை இலகுவாக மேற்கொள்ள உதவியாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

வெள்ள அனர்த்தங்களின் போது மேற்படி குறைவாக்கல் வட்டமும், அபாய மதிப்பீடும் மிக முக்கியமானதாகக் காணப்படுகின்றது. உலகின் பல நாடுகளில் அனர்த்த முகாமைத்துவத்தில் மேற்படி அவசியமும் முக்கியமும் வலியுறுத்தப்படுகின்றன.

இதனை விட கடந்த வருட வெள்ள அனர்த்தத்தின் பாதிப்பின் அடிப்படையிலும் , வெள்ள அனர்த்தத்தின் எதிர்கால சாத்தியப்பாடுகளின் தன்மையைப் பொறுத்தும் பின்வரும் செயற் றிட்டங்கள் நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமானதாகும். அந்தவகையில்,


1. யாழ்ப்பாண மாவட்டத்தின் அனைத்துக் கிராமசேவகர் பிரிவுகள் தோறும், வினைத் திறன் மிக்க செயற்பாட்டாளர் களைக் கொண்ட, அனர்த்த மீட்புக்குழுவை உரு வாக்கி, அவர்களுக்கான பயிற்சியும், வசதிக ளும் செய்து கொடுக்கப்படவேண்டும். இவர்கள் அக்கிராமசேவகர் பிரிவிலும் ஏற்படும் எத்தகைய அனர்த்தத்தின்போதும் உடனடி மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அனர்த்தப் பகுதியில் இருந்து மக்களை உடனடியாக வெளியேற்றவேண்டும்.

2. மாவட்டத்தில் ஒரு ஆண்டு முழுவதற்கும் எத்தகைய அனர்த்தம் ஏற்பட்டாலும், உதவுவதற்கான சில குழுக்களை நியமித்தல் வேண்டும். இதற்காக அரச சார்பற்ற நிறுவனங்களைப் பயன்படுத்தலாம். இவர்கள் அனர்த்தத்தின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கான உணவு மற்றும் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவர்.

3. ஒவ்வொரு பிரதேசங்களிலும் (கிராம சேவகர் பிரிவிலும்) உயரம்கூடிய, உயரம் குறைந்த பகுதிகள் அடையாளப்படுத்தப்பட்டிருப்பதுடன் அவற்றுக்கு செல்வதற்கான பாதுகாப்பான பகுதிகள் பிரதேச மக்களுக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும்.

4. மாவட்டம் முழுவதும் அனர்த்தகால தகவல் பரிமாற்றச் சேவையினை முன்னெடுப்பதுடன் அனர்த்தம் தொடர்பான பிந்திய நிலைமைகள் பற்றிய தகவல்கள் உடனுக்குடன் மக்களைச் செயன்றடைய ஏற்பாடுகள் மேற்கொள்ளுதல் வேண்டும்.

5. யாழ்ப்பாண மாவட்டத்தில் கால நிலை அனர்த்தங்களான வெள்ளப்பெருக்கு, வரட்சி, சூறாவளி, புயல் வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுவதனால் மாவட்டத்தின் வானிலை அவதானிப்பு நிலையத்தினை நவீன மயப்படுத்துவதுடன், யாழ்ப் பாண மாவட்டத்துக்கான தனியார் வானிலை முன்னறிவிப்புக்களை செயற் படுத்தல் வேண்டும்.



6. அனர்த்த சமயம் ஒன்றின் போது உதவி புரியக்கூடிய அனைத்து பொதுச்சேவைத் துறையினருடனும், வலுவானதொரு ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல் வேண்டும். இதற்கென மாவட்டச் செயலகத்தில் பிரத்தியேகமான அலுவலகம் ஒன்றினைத் தாபித்து இதனூடாக இத்தகைய ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல் வேண்டும்.

7. அனர்த்தங்கள் பற்றியும், அனர்த்த காலத்தின்போது எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது பற்றியும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துல் வேண்டும். இவ் விழிப்புணர்வு நடவடிக்கைகளை அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்னெடுக்கலாம்.

எனவே யாழ்ப்பாண மாவட்டத்தின் அண்மை 10 ஆண்டு களை அதன் முன்னுள்ள 100 ஆண்டு களுடன் ஒப் பிட்டால் இயற் கை அனர்த் தங்கள் கடந்த 10 ஆண்டு களாகவே அதி கம் ஏற்பட்டுள்ளன. யுத்த அனர்த்தம் தவிர்க்கப்பட்டுள்ளது.

**நா. பிரதீபராஜா**
விரிவுரையாளர், புவியியற்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

இந்நிலையில் இயற்கை அனர்த்தங்களின் அழிவுகளைக் குறைக்க நாம் முயல வேண்டும். இக்கட்டுரை முதல் பந்தியில் குறிப்பிட்டது போல இயற்கை அனர்த்தங்களை நாம் தவிர்க்கமுடியாது. ஆனால் அவற்றின் மூலம் ஏற்படும் அழிவுகளைக் குறைக்க முடியும்.

எனவே இதனை உணர்ந்து இயற் கை அனர் த்தம் ஒன்றை எதிர்கொள்வதற்கான வலுவுடன் இருக்கவேண்டியது தனிநபர்களினதும், சமூக அரச சார்பற்ற அமைப்புகளின் கடமை யும், பொறுப்பும் ஆகும். எனவே இதனை உணர்ந்து நாம் அனைவரும் விழிப்புடன் செயற்பட்டு அனர்த்தம் ஒன்றின் அழிவு களைக் குறைத்துக் கொள்ளல் வேண்டும். இல்லாவிட்டால், இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் அழிவுகள் மோசமானதாக இருக்கும் என்பது எவரும் மறு க்க முடியாததாக இருக்கும் என்பது எவரும் மறுக்க முடியாத உண்மையாகும். (முற்றும்)

## ஐ.தே.க.வின் முக்கிய உறுப்பினர்கள் ஆளும் கட்சியில் இணையத் திட்டம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் சில முக்கியஸ்தர்கள் விரைவில் ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளவுள்ளதாக சிங்கள ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன .

ரணில் விக்கிரம சிங்கவின் தலைமைத்துவத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் கிளர்ச்சியாளர்களே இவ்வாறு அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளத் தீர்மானித்துள்ளனர்.

அரசாங்கத் துடன் இணைந்து கொள்வது தொடர்பில் ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது

ரணில் விக்கிரம சிங்கவை தலைமைப் பதவியில் இருந்து விலக்குவதற்கு குறித்த நாடாளுமன்றக் குழுவினர் கடும் முயற்சி மேற்கொண்டு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் ரணில் விக்கிரமசிங்க தொடர்சியாக தலைமைப் பதவியை வகித்து வருவதனால் கட்சியை விட்டு வெளியேறி அரசாங்கத்துடன் இணைந்துகொள்வதென குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (6)

## சரத்பொன்சேகாவின் முன்கூட்டிய பதவி விலகலை ஐ.தே.க. விரும்பவில்லை

கூட்டுப்படைகளின் தலைமையதிகாரி சரத் பொன்சேகா முன்கூட்டியே பதவியில் இருந்து ஓய்வு பெற்றமை குறித்து ஐக்கிய தேசியக் கட்சி அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட்ட நிலையில் சரத் பொன்சேகா பதவியிலிருந்து விலகியிருந்தால் அது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு வெற்றி வாய்ப்பை அதிகரித்திருக்கும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் கருத்தாக உள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவித்தல் வெளியான பின்னர் சரத் பொன்சேகா தமது பதவியில் இருந்து விலகியிருந்தால் அது அவருக்கு நன்மையைக் கொடுத்திருக்கும் என ஐக்கிய தேசியக் கட்சித் தரப்பு தெரிவித்துள்ளது.

சரத் பொன்சேகா பதவி விலகியமையை அடுத்து அரசாங்கம் தமது அடுத்த கட்ட நடவடிக்கையை நோக்கிய திட்டமிடலை செய்யக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஐக்கிய தேசியக்கட்சி கருதுகிறது.

குறிப்பாக முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தத் திட்டமிட்டிருந்த அரசாங்கம் தற்போது பொதுத் தேர்தலை நடத்தக்கூடிய நிலைப்பாட்டுக்குச் சென்று சரத் பொன்சேகாவின்பதவி விலகல் தாக்கத்தை குறைக்கும் நடவடிக்கையில் ஈடுபடலாம் என ஐக்கிய தேசியக்கட்சி கருதுகிறது. இக்காரணங்களை முன்னிட்டே முன்னாள் இராணுவத் தளபதியும் கூட்டுப் படைகளின் தலைமையதிகாரியுமான சரத் பொன்சேகா முன்கூட்டியே பதவியிலிருந்து ஓய்வு பெற்றமை குறித்து ஐக்கிய தேசியக்கட்சி தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது. (6)

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

## உடல் எண் : 1 விதி எண் : 5

**உடலமைப்பு**

பிறந்த எண் 1, விதி எண் 5 ஆகக் கொண்டவர்கள் சூரியன் ,புதன் ஆகியோரின் ஆதிக்கத்தில் பிறந்தவர் ஆவர்.

இவர்கள் நடுத்தர உயரம் உள்ளவர்களாக இருப்பர் .சற்று பூசினாற்போல் காணப்படுவர். இவர்களின் தோற்றம் பிறரைக் கவரும்படி இருக்கும்.

**மன , குணவியல்பு**

இவர்கள் எப்போதும் சுறுசுறுப்புள்ளவர்களாக இருப்பர். காரியத்தை முடிப்பதில் கண்ணும் கருத்து முள்ளவர். உணவையும், உறக்கத்தையும் கூடப் பார்க்காது வேலையை முடிக்க வல்லவர். அந்த அளவு விடா முயற்சி உள்ளவர்களாக இருப்பர்.

இவர்கள் பிறரிடம் அன்புடனும் ,பாசத்துடனும் நடந்து கொள்வர். ஆனால் தன்னை எதிர்ப்பவர்களை முறியடிக்கும் ஆற்றலும் இவர்களிடம் உண்டு.

இவர்கள் நினைத்தால் ஆக்கவோ ,அழிக்கவோ வல்லவர்கள் .அதனால் ஏற்படும் விளைவுகளை எண்ணிப் பார்க்கமாட்டார்கள். இவர்கள் சதா எதையாவது ஒன்றைப் பேசிக் கொண்டேயிருப்பர். தனியாக நடந்து செல்லும் போது கூடப் பேசிக்கொண்டே இருப்பர். அந்த அளவுக்கு தனக்குத்தானே பேசிக் கொள்ளும் சுபாவம் உடையவர்கள்.

இவர்களுக்கு அதிக அளவில் நண்பர்கள் இருப்பர். ஆனால் நண்பர்களிடம்கூட மனம் விட்டு எதையும் வெளிப்படுத்தமாட்டார்கள்.

இவர்கள் நண்பர்களுக்கும் மற்றவர்களுக்கும் பலவகையில் உதவி புரிபவராக இருந்தாலும் சில நேரங்களில் தொல்லை கொடுக்கவும் செய்வர்.

**குடும்ப வாழ்க்கை**

இவர்கள் காதல் புரிய நேர்ந்தாலும் அது நிறைவேறாது போய்விடும். இவருக்கு வாய்க்கும் மனைவி ஒத்துழைப்பு தருபவளாக இருக்கமாட்டாள்.

இவர்களிடம் உற்றார் உறவினர் கூட அனுசரணையாக இருக்க மாட்டார்கள்.

**தொழிலும் வருமானமும்**

இவர்கள் அரசு அல்லது தனியார் நிறுவனங்களில் பணி புரிவதைவிட சொந்தத் தொழிலிலேயே அதிக ஈடுபாடு கொண்டவராக இருப்பர்.

வண்டி,வாகனம் மற்றும் போக்குவரத்துத் துறையில் தொழில் புரிவர் இவர்கள். நெருபுடன் இணைந்த இரும்பு எந்திர தொடர்பான தொழில்களில் சிறந்திருப்பர். ஏற்றுமதி இறக்குமதி தொழில்கள் கமிஷன் ஏஜன்சித் தொழில் போன்றவற்றில் இவர்கள் ஈடுபாடு கொண்டிருப்பர். அரசியலில் கூட இவர்கள் ஈடுபாடு கொண்டிருக்கக்கூடும். இருந்தாலும் அதில் உயர்வு பெறுவது கடினம். இவர்கள் தொழிலில் பெருமளவு சம்பாதிக்க வல்லவர்களாக இருப்பர்.

**ஆரோக்கிய நிலை**

இவர்களுக்கு உஷ்ண சம்பந்தமான நோய்களும் இரத்தக் கொதிப்பு, மூலம் போன்றனவும் ஏற்படும். நீர் சம்பந்த நோய்களும் மூட்டு வலி போன்றனவும் ஏற்படும். சிற்றின்பத்தில் அதிகமாக ஈடுபடுவதாலும் பல பெண்களிடம் தொடர்பு கொள்வதாலும் இவர்களுக்குப் பால் வினை நோய்கள் உண்டாக வாய்ப்பு உண்டு.

**சாதக பாதக எண்களும் திகதியும்**

இவர்களுக்கு சூரியன் புதன் ஆதிக்கம் பெற்ற 1,5 ஆகிய தொடர்புடைய விஸ்தார எண்களுக்கு யோகமுள்ள எண்ணுக்குப் பெயரை மாற்றி வைத்துக்கொண்டால் மிக யோகமாக இருக்கும்.

சுக்கிரன் ஆதிக்கத்திற்குட்பட்ட 6 கூட சிலருக்குப் பொருந்திவரக் கூடும்.

தம் நிறுவனங்களுக்குக்கூட 1,5,6 தொடர்புடைய யோக பலன் தரவல்ல விஸ்தரா எண்ணுக்குப் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

இவர்களுக்கு 6ஆம் எண்ணின் தொடர்புடைய எண்களும் திகதிகளும் யோகமளிக்க வல்லவை. ஆனால் சனியின் ஆதிக்கம் பெற்ற 8ஆம் அது தொடர்புடைய எண்களும் திகதிகளும் யோகமற்றவை. விலக்குவது நலம்.

## உடல் எண் : 1 விதி எண் :6

**உடலமைப்பு**

பிறந்த எண்1, விதி எண் 6 ஆக உள்ளவர்கள் சூரியன் சுக்கிரனின் கூட்டு ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். உயரமான தோற்ற முடையவர்களாயும் அழகிய நடையுடன் மிடுக்காகக் காட்சியளிப்பர். எப்போதும் பிறரைக் கவரும் வண்ணம் ஆடை அணிவர்.

**மன குணவியல்பு**

இவர்கள் நல்ல மனமுள்ளவர்கள் நேர்மையானவர்களாகவும் இருப்பர். இயற்கையை ரசிக்க வல்லவர். வாசனைத் திரவியங்களில் அதிக மோகமுள்ளவர்களாக இருப்பர். இவர்களிடம் எதிலும் பதற்றத்தைக் காண முடியாது .எதையும் யோசித்து நிதானமாகச் செய்வர்.

இவர்கள் சுயநலவாதிகளாகவும் இருப்பர். தனக்கு இலாபமில்லாத எந்தச் செயலிலும் ஈடுபடமாட்டார்கள். அதைப் போன்று இவர்கள் பழகுவதும் இருக்கும். தனக்கு உதவி இல்லாத ஒருவரிடமும் பழக்கம் வைத்துக் கொள்ள மாட்டார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருடன் தான் நட்புக் கொள்வர்.

இவர்கள் நிதானமாகவும் பிறரைக் கவரும்படியும் பேசுவர். வீண் பேச்சு இருக்காது. இவர்கள் சாதுபோல காணப்பட்டாலும் கோபம் வந்துவிட்டால் எளிதில் கட்டுப்படமாட்டார்கள். தம் வீட்டையும் தம் பொருள்களையும் சுத்தமாகவும் கவரும்படி நேர்த்தியாகவும் வைத்திருப்பர்.

**குடும்ப வாழ்க்கை**

இந்த உலக இன்பங்களை அனுவவிக்கவே பிறந்தவராகத் தம்மை நினைத்துக் கொள்வர். அதனால் எப்போதும் உல்லாசமாகப் பொழுதைப் போக்குவர். இருந்தாலும் இவர்களுக்கும் பெண்களுக்கும் ஒத்துவருவதில்லை. அவர்களால் பல சங்கடங்களை ஏற்க நேரும் .

இவர்களின் காதல் வெற்றி பெறாமல் போகும். இவர்களுக்கு வாய்க்கும் மனைவி குடும்பத்திற்கு ஏற்றவளாக இருந்தாலும் இவருடைய போக்கினால் பல பிரச்சினைகள் தோன்றும். அதனால் குடும்பத்தில் பூரண அமைதி நிலவுவது கடினம். இவர்கள் பல பெண்களுடன் தொடர்பு கொண்டவர்களாக இருப்பர். பொதுவாகவே இவர்களுக்குப் பெண்களால் பல பிரச்சினைகள் தோன்றி குடும்ப மகிழ்ச்சியைக் கெடுக்கும்.

**தொழிலும் வருமானமும்**

அதிக உழைப்பும் முயற்சியுமின்றி அதிக பொருள் சம்பாதிக்கக் கூடியவர்கள். இவர்கள் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்களாக இருப்பர். பெண்கள் விரும்பும் ஆடம்பர மற்றும் அழகு சாதனப் பொருட்களை விற்பனை செய்யும் கூடத்திலோ அல்லது தயாரிக்கும் தொழில்களிலோ ஈடுபட்டிருப்பர். ஆடை ஆபரணங்கள் தொழிலும் ஈடுபடக்கூடும். அது நெருப்பு இரும்பு தொடர்புடையதாக இருக்கும். இவர்களுக்கு காண்ட்ராக்ட் தொழிலும் பொருத்தமுடையதாய் இருக்கும்.

இவர்கள் கஷ்டமின்றி அதிகமாகச் சம்பாதிக்கக் கூடியவர்கள் . இவர்களின் பொருளாதார நிலை உயர்வாயிருக்கும். ஆனால் அதில் பெரும்பகுதியை ஆடை அலங்காரத்திற்கும் ஆடம்பரத்திற்கும் செலவு செய்பவர்களாக இருப்பர்.

**ஆரோக்கிய நிலை**

இவர்களுக்கு உஷ்ண சம்பந்தமான இரத்தக் கொதிப்பு காய்ச்சல் நோய் உண்டாகும். மிகுதியான உடல் உறவினால் பலக் குறைவும் பால்வினைநோயும் ஏற்படக்கூடும்.

**சாதக பாதக எண்களும் திகதியும்**

இவர்கள்1,6 வரக்கூடிய சூரியன் சுக்கிரனின் ஆதிக்கத்திற்குட்பட்ட யோகமான பலன் தரும் எண்களுக்கு தம் பெயரை அமைத்துக் கொள்ளலாம். தம் நிறுவனங்களுக்கும்1,6 தொடர்புடைய யோகபலன் தரவல்ல எண்களில் பெயர் அமைப்பது நல்லது.

அதைப்போன்று 1,6 கூடிய எண்களும் திகதிகளும் யோகமானவையே.

ஆனால் குரு ,சனி ஆதிக்கத்திற்குட்பட்ட 3, 8 வரக்கூடிய எண்களும் திகதிகளும் யோகமற்றவை விலக்கத்தக்கவையாகும்.

(தொடரும்)

# கைதிகள் ஒப்புதல் வாக்கு மூலம் தந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்

## பிரதி நீதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்க் கைதிகளுக்கும் சிறைச்சாலை அதிகாரிகளுக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பில் மகசின் சிறைக் கைதிகள் ஏழுபேர் கடுமையாக தாக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் கைதிகளோ அல்லது அவர்களது உறவினர்களோ எழுத்து மூல ஒப்புதல் வாக்கு மூலம் வழங்கினால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்புப் பிரதி அமைச்சர் புத்திரசிகாமணி தெரிவித்துள்ளார்.

கைதிகளின் கணக்கெடுப்பிற்காக தமிழ் சிறைக்கைதிகளை அழைக்கச் சென்ற போதே சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் தமிழ்க் கைதிகளுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக சிறைச் சாலையின் உயரதிகாரிகளை தொடர்பு கொண்ட போது தமிழ்க் கைதிகள் எவரும் தாக்கப்படவில்லை என கூறியதாக அமைச் சர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை மேற்படி சம்பவம் தமிழ்க் கைதிகள் மீதான திட்டமிட்டு கட்டவிழ்க்கப் பட்ட ஒரு மிலேச்சத்தனமான கொடூர செயல் என இடது சாரி முன்னணி கண்டனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(6)

# நுவரெலியாவில் தமிழர்கள் மீது படையினர் தாக்குதல்

(கொழும்பு)

மலையகத்தின் நுவரெலியாவில் உள்ள தமிழர்களுக்குச் சொந்தமான நகை அடகு பிடிக்கும் நிலையத்திற்கு சென்ற படையினர் சிலர் அங்குள்ளவர்களை தாக்குதல் நடத்தியுள்ளதில் தமிழர்கள் சிலர் காயங்களுக்குள்ளாகினர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

மாலை 6 மணிக்கு பின்னர் குறித்த நிலையத்திற்கு மதுபோதையில் சென்ற படையினர் நகை அடகு பிடிக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

எனினும் மாலை 6 மணிக்கு பின்னர் நகை அடகு பிடிப்பதில்லை என நிலையத்தில் உள்ளவர்கள் தெரிவித்ததுடன் அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அத்துடன் நிலையத்தின் உடமைகளுக்கும் சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் சம்பவத்தில் காயமடைந்த தமிழர்கள் சிலர் நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(6)





நியூசிலாந்து, நகரில் உள்ள எலிம் தேவாலயத்தின் நிதியுதவியுடன் மாணிப்பாய் கோவில் பற்று லயன்ஸ் கழகத் தினரால் அண்மையில் மிருசுவில் நலன்புரி முகாமிலுள்ள குழந்தைகளுக்கு நிவாரணப்பொருட்கள் வழங்கப் பட்டன. இந் நிகழ்வில் கழகத் தலைவர் லயன் இ.இராஜசூரி நிவாரணப்பொருட்கள் அடங்கிய பொதி ஒன்றினை வழங்குவதையும் திட்ட இணைப்பாளர் லயன் செ.ஞானராஜா மற்றும் முதலாவது உதவித் தலைவர் லயன் அ.இரட்ணசேகர் ஆகியோர் நிவாரணப் பொருட்களுடன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

இறந்து போனவனின் செருப்புகளுக்காக காத்திருப்பவன் வெறுங்கால்களுடனே நடக்க வேண்டி வரும்.

– டேனிஷ்

வலம்புரி

## சிங்கத்தை கிணற்றில் வீழ்த்த தமிழருக்கு முயலின் மூளை தேவை

பாரதப்போர் ஏற்பட்டது ஏன்? என்று யாரிடமேனும் கேட்டால் பாண்டவர்களின் உரிமையை வழங்க துரியோதனன் மறுத்ததால் என்று பதில் கிடைக்கும்.

ஆனால் பாண்டவர்களுக்கான உரிமையை துரியோதனன் வழங்க மறுத்ததால் பாரதப்போர் மூண்டதென்பதை ஏற்றுக்கொள்வதற்கு நாம் உடன்பாடல்ல.

உண்மையில் துரோணாச்சாரிக்கு பாஞ்சாலன் ஒரு பசுமாட்டை கொடுக்காததே பாரதப்போர் ஏற்படுவதற்கு காரணமாகும்.

பாஞ்சாலன் துரோணாச்சாரிக்கு பால் தரும் பசுவை அன்பளிப்பாகக் கொடுத்திருந்தால் பாரதப் போருக்கு இடமே இருந்திருக்காது.

ஆக, பாரதப் போரின் கருக்கட்டல் பாஞ்சாலனுக்கும், துரோணாச்சாரிக்கும் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டில் உருவெடுத்தது.

இதே போன்றுதான் வன்னியுத்தமும். பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான யுத்தம் என்று அதற்குப் பெயர் சூட்டினாலும், உள்நோக்கம் தத்தம் பதவியை தக்கவைப்பதாகும்.

ஜனாதிபதிப்பதவியை பொறுப்பேற்றுக் கொண்ட மகிந்த ராஜபக்ஷ தனது 'பதவியை' அடிப்படையாகக் கொண்டு விடுதலைப் புலிகளை ஒழித்துக்கட்ட வேண்டும் என முடிவெடுத்தார்.

புலிகளின் தற்கொலைத் தாக்குதலில் தப்பிப்பிழைத்த ஜெனரல் சரத் பொன்சேகா தன்னை மையமாக வைத்து போரை முன்னெடுத்தார்.

தத்தம் சுயநோக்கிற்காக வன்னியுத்தம் நடத்தப்பட்டு வெற்றி கிடைக்கப்பெற்றாலும் போரில் இணைந்து நின்றவர்களால் இப்போது ஒற்றுமைப்பட முடிவில்லை.

வன்னியுத்தம் பொதுநோக்குடையது. பயங்கரவாதத்தை ஒழித்து பின் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் நோக்குடையதாக இருந்தால் போரில் இணைந்த இருவரும் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த ஒன்றுபட்டிருப்பர்.

நான் யுத்தத்தில் வெற்றிபெற்றேன். ஆனால் அரசினால் சமாதானத்தில் வெற்றிபெற முடியவில்லை என ஜெனரல் சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

எனவே யுத்தம் சமாதானத்துக்கானதல்ல. அது தத்தம் இலக்கிற்கானது என்ற முடிபை நாம் உறுதி செய்து கொள்ள முடியும். இங்குதான் தமிழ்த் தலைமைகள்மிக நிதானமாகச் செயற்பட வேண்டியுள்ளது.

அதாவது சிங்களத் தலைமைகளின் அரசியல் நகர்வு எதற்கானதென்பதை நாம் சரியாக இனங்கண்டு கொள்ள வேண்டும்.

காலாகாலமாக எங்களுக்கான அரசியல் தோல்விகள் எங்கள் பக்கத்தின் சிந்திப்பில் உள்ள பலவீனத்தையே சுட்டி நிற்கின்றது.

இந்த சிந்தனை மாறவேண்டும். சிங்கத்தை கிணற்றில் வீழ்த்த முயல் கையாண்ட தந்திரம் தமிழ்த் தலைவர்களுக்கு இருக்க வேண்டும்.

இல்லையேல் ஒவ்வொரு நாளும் சிங்கத்துக்கு இரையாவதைத் தவிர வேறுவழியேதும் இல்லை.

# இலங்கைத் தமிழர்கள் 78 பேரின் எதிர்காலம் ஐ.நா.வின் கையில்

## அவுஸ். பிரதமர் தெரிவிப்பு



இலங்கைத் தமிழர்களின் புகலிட கோரிக்கையின் எதிர்காலம் ஐ.நா.வின் அகதிகளிற்கான உயர்ஸ்தானிகராலயத்தின் கையில் உள்ளது என அவுஸ்திரேலிய பிரதமர் கெவின் ரூட் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து படகு மூலம் அவுஸ்திரேலியா நோக்கி வந்த 78 தமிழர்களை அவுஸ்திரேலியக் குழுவினர் தடுத்து நிறுத்தி தங்களது ரோந்துக் கப்பல் மூலம் இந்தோனேசியாவுக்கு அனுப்பி வைத்தனர்.

எனினும் இந்தோனேஷிய அரசாங்கம் இவர்களை ஏற்க மறுத்துவரும் நிலையில் 78 பேருக்கும் கொள்கை அளவில் புகலிடம் தர அவுஸ்திரேலியா ஒப்புக்கொண்டது. 12 வாரங்களுக்குள் 78 பேரையும் குடியேற்றம் செய்யவும் அது முன்வந்தது.

இதைத் தொடர்ந்து அந்தக் கப்பலிலிருந்து 22 தமிழர்கள் நேற்று முன்தினம் வெளியேறியுள்ளனர். ஏனைய 56 பேரும் கப்பலிலேயே உள்ளனர். 22 பேரையும் தான் சுங் பினாங்கில் உள்ள குடியேற்றப் பிரிவு மையத்திற்கு இந்தோனேசியா அதிகாரிகள் அனுப்பி வைத்துள்ளனர்.

இந்த நிலையில் 78 பேரின் எதிர்காலம் ஐ.நா. அதிகாரிகளிற்கான உயர்ஸ்தானிகராலயத்தின் கையில் உள்ளதாக அவுஸ்திரேலிய பிரதமர் கெவின் ரூட் தெரிவித்துள்ளார்,

சிங்கப்பூரில் நடைபெறும் ஆசியா பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கெவின் ரூட் சிங்கப்பூர் சென்றுள்ளார்.

அங்கு அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், அனைத்து அரசியல் புகலிடம் கோரும் தமிழர்களின் கோரிக்கையை மிக வும் நிதானமாகவும், பொறுமையாகவும், முறைப்படியும் நாங்கள் அணுகுவோம்.

இருப்பினும் தனி நபர்களின் புகலிடக் கோரிக்கை குறித்து முதலில் கவலைப்பட வேண்டியது ஐ.நா. அகதிகளிற்கான உயர்ஸ்தானிகராயலயம் தான். இரண்டாவது அகதிகளை ஏற்பது தொடர்பாக ஐ.நா. பிரகடனத்தில் கையெழுத்திட்டுள்ள 15 நாடுகளுடையதாகும். இந்த முறைப்படி இலங்கைத் தமிழர்கள் விவகாரத்தை நாங்கள் அணுகுவோம் என்றார். (6)

## பம்பலப்பிட்டி இளைஞர் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய 7 பொலிஸார் இடை நிறுத்தம்

(கொழும்பு)

பம்பலப்பிட்டியில் சித்த சுயாதீனமற்ற தமிழ் இளைஞர் ஒருவரை மூர்க்கத்தனமாக படுகொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் ஏழு பொலிஸ் உத்தியோகத்தர்களது பணி இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தின் பின்னர் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக இரகசியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவம் தொடர்பில் சுமார் 60 பேருக்கு மேற்பட்டோரிடம் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன. இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் நான்கு பேர் ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் பொலிஸ் உப பரிசோதகர் ஒருவரும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)

## மகசின் சிறைச்சாலையிலுள்ள —

# 87 தமிழ்க் கைதிகள் தமது உயிருக்கு உத்தரவாதம் வழங்கக்கோரி உண்ணாவிரதம்

(கொழும்பு)

மகசின் சிறைச்சாலை ஜே புளக்கில் உள்ள 87 தமிழ் அரசியல் கைதிகள் தமது உயிருக்கு உத்தரவாதம் வழங்கக் கோரியும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தக்கோரியும் நேற்று முன்தினம் முதல் உண்ணா விரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை தமிழ் அரசியல் கைதிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதில் 17 கைதிகள் காயமடைந்தனர். இவர்களில் 7 பேர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் சிறைச்சாலையில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மேற்படித் தாக்குதலை அடுத்து மகசின் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் உண்ணா விரதத்தில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் மேற்படி கைதிகள் தமக்கு பிணை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்துள்ளதுடன் மகசின் சிறைச்சாலை உட்பட வேறு பல சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகள் அவர்கள் சார்ந்த பிரதேசங்களில் உள்ள சிறைச்சாலைகளுக்கு மாற்றப்படவேண்டும் என்ற கோரிக்கையையும் முன் வைத்துள்ளனர். (6)

# ஜனாதிபதிக்கு எதிராக இரு வேட்பாளர்களை களமிறக்க எதிர்க்கட்சிகள் திட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது இரண்டு வேட்பாளர்களை களமிறக்குவதற்கு எதிர்க்கட்சிகள் திட்டமிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரு தரப்பு போட்டியை விடவும் முத்தரப்பு போட்டியின் மூலம் எதிர்க்கட்சிகளுக்கு அதிக நன்மை கிட்டும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத்பொன்சேகா மற்றும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்குவது குறித்து ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிங்கள மக்களின் வாக்குகளை மூன்றாக பிரிப்பதன் மூலம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றி வாய்ப்பை வரையறுக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய தேசிய முன்னணியினால் இரண்டு வேட்பாளர்களை தேர்தலில் களமிறக்க முடியுமா என்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு தேர்தலில் களமிறக்குவது தொடர்பில் சிக்கல் ஏற்பட்டால் ஜெனரல் சரத் பொன்சேகாவை வெறும் ஓர் கட்சி சின்னத்தின் கீழ் களமிறக்க முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்கவையும் சரத் பொன்சேகாவையும் தேர்தலில் களமிறக்குவது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுவில் அனுமதி கோரப்படவுள்ளது. சிங்கள பௌத்த மக்களின் வாக்குகளை சரத்பொன்சேகாவினால் பெற்றுக்கொள்ள முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (6)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மனிதன் தனது விதியைத் தானே அமைக்கிறான்



என்னுடைய இலட்சியத்தை, உண்மையில் ஒருசில சொற்களில் சொல்லி முடித்துவிடலாம். அதாவது, மக்களுக்கு அவர்களுடைய தெய்வீகத் தன்மையை எடுத்துப் போதிப்பதும் வாழ்க்கையின் ஒவ்வோர் இயக்கத்திலும் அதை எப்படி வெளிப்படுத்திக் காட்டுவது என்பதைச் எடுத்துச் சொல்வதும் தான் அது.

தூய்மை,பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். அத்துடன் இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.

# க.பொ.த சாதாரண தரப் பரீட்சை-2009
# பயிற்சி வினாத்தாள் -கணிதம்

## பகுதி-II

ப.சண்முகம், சி.தினேஸ்
(ஆசிரியர்கள், வட்டு. மத்திய கல்லூரி)

### பகுதி - A


எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

(01) 1. $\log_x {}^{1}/_{27} = -3$ எனின் X இன் பெறுமானம் யாது?

2. $\log 2 = 0.3010$, $\lg 3 = 0.4773$ எனின், lg 15 இன் பெறுமானம் யாது?

3. $4^{2x-1/2} = 8$ எனின் X இன் பெறுமானம் காண்க.

4. தரப்பட்டுள்ள முக்கோணி ஒரு சமபக்கக்கோணி எனின், X, Y பெறுமதிகளைக் காண்க.





(02) a) 1. $Y=(X-2)^2-3$ எனும் சமன்பாடு குறிக்கும் வளையியை வரைவதற்குப் பின்வரும் பூரணமற்ற அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| X | -1 | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
| Y | --- | --- | --- | -3 | -2 | 1 | 6 |

2. X,Y அச்சுக்களில் 10 சிறு பிரிவுகளை ஓர் அலகாக் கொண்டு ஆள்கூற்றுத்தளம் வரைந்து அதில் புள்ளிகளைக் குறிப்பதன் மூலம் ஒப்பமாக வளையியை வரைக.

b) உமது வரைபைப் பயன்படுத்தி,
1. வரைபின் இழிவுப் பெறுமானம் யாது?
2. சமச்சீரச்சின் சமன்பாட்டை எழுதுக?
3. சார்பு மறையாக இருக்கும் X இன் பெறுமான வீச்சைத் தருக?
4. $Y=(X+1)^2 + 1$ இன் இழிவுப் புள்ளியை உய்த்தறிக?

(03) ஐஸ்கிறீம் கோன் (cone) ஒன்றினுள் ஐஸ்கிறீம் இடப்பட்ட முறை உருவில் நிழற்றிய பகுதியினால் காட்டப்பட்டுள்ளது. அதில் 6cm விட்டம் உள்ள ஆரைக் கோளப்பகுதியையும், 9cm உயரம் கொண்ட கூம்புப் பகுதியையும் கொண்டுள்ளது.




1) ஐஸ்கிறீம் இல்லாத கூம்பின் உயரம் யாது?

2) X இன் பெறுமானத்தைக் காண்க?

3) கூம்பினுள் அமிழ்த்தப்பட்ட ஐஸ்கிறீமின் கனவளவு $19\pi.cm^2$ எனக் காட்டுக?

4) அரைக்கோள ஐஸ்கிறீமின் கனவளவு $18\pi$ $cm^3$ எனக் காட்டுக?


5) மொத்த ஐஸ்கிறீமின் கனவளவைக் காண்க?

(04) பேருந்து நிலையம் ஒன்றில் இருந்து புறப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை பற்றியும், அவற்றில் பயணித்த பயணிகளின் எண்ணிக்கை பற்றியும் பெறப்பட்ட தகவல்கள் கீழ்வரும் அட்டவணையில் தரப்படுகின்றது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பேருந்திலுள்ள பயணிகளின் எண்ணிக்கை | 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 |
| பேருந்துகளின் எண்ணிக்கை | 4 | 7 | 10 | 11 | 16 | 14 | 10 | 8 |

1. மேற்படி தகவல்களில் பெறப்பட்ட பேருந்துகளின் மொத்த எண்ணிக்கை யாது?
2. ஆகாரப் பெறுமானம் யாது?
3. ஆகாரப் பெறுமானத்தை எடு கொண்ட இடையாகக் கொண்டு ஒரு பேருந்தில் பயணித்த பயணிகளின் இடையைக் கிட்டிய முழு எண்ணில் காண்க.
4. அன்றைய தினம் பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்ட பேருந்துகளில் பயணம் செய்த பயணிகளின் மொத்த எண்ணிக்கையை இடைப்பெறுமானத்தைப் பயன்படுத்திக் காண்க?

(05) a) தரப்பட்ட உருவை அவதானித்து,





1. P இலிருந்து Q இன் திசைகோள் யாது?
2. Q இலிருந்து P இன் திசைகோள் யாது?
1. P இலிருந்து R இன் திசைகோள் யாது?

b) கடல் மட்டத்திலிருந்து 100m உயரத்திலிருக்கும் வெளிச்ச வீட்டின் உச்சியில் நிற்கும் மனிதனொருவன் அவ்வெளிச்ச வீட்டை நோக்கி சீரான கதியில் வந்துகொண்டிருக்கும் படகொன்றை முதலில் $32^{O}$ இறக்க கோணத்திலும் 10 செக்கனின் பின்னர் $45^{O}$ இறக்கக் கோணத்திலும் அவதானிக்கின்றான்.
(மனிதனின் உயரத்தைப் புறக்கணித்து)

1. 10 செக்கன்களில் அப்படகு நகர்ந்த தூரத்தை கணிக்குக.
2. படகின் கதியை கணிக்க.

(06) O ஐ மையமாகக் கொண்ட வட்டத்தின் விட்டம் PQ ஆகும். நாண் AQ, AB இன் செங்குத்தாகும்.




1- இங்கு AX, XB தொடர்பாக யாது கூறுவீர்?
2- முக்கோணி AXQ, PXB என்பன சமகோண முக்கோணி என நிறுவுக.
3- முக்கோணி AXQ, PXB என்பவற்றின் பக்கங்களுக்கிடையிலான விகிதத்தைத் தருக.
4- இவ்விகிதம் AX = 6cm, XQ = 2cm எனின் XPஇன் நீளத்தைக் காண்க.
5- வட்டத்தின் ஆரையைக் காண்க.

# இந்திய - இலங்கை அணிகள் மோதும் முதலாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்



இந்திய-இலங்கை அணிகள் மோதும் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட்போட்டி குஜராத் தலைநகர் அகமதாபாத்தில் இன்று ஆரம்பமாகின்றது.

சங்கக்கார தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணி 3டெஸ்ட், இரண்டு இருபது-20 போட்டி மற்றும் 5ஒரு நாள் போட்டிகளில் விளையாடுவதற்காக இந்தியா வந்துள்ளது.

இலங்கை அணி இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் அணியுடன் மோதிய 3நாள் பயிற்சியாட்டம் ஒரு பந்துகூட வீசப்படாமல் ரத்துச் செய்யப்பட்டது.

இந்திய அணி சமீபத்தில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒரு நாள் தொடரை 2:4 என்ற கணக்கில் இழந்தது. இதனால் இந்திய அணி இலங்கைக்கு எதிரான தொடரை வெல்ல வேண்டிய நிலையுள்ளது.

இலங்கை அணி இந்திய மண்ணில் இதுவரை டெஸ்ட் தொடரை வென்றது கிடையாது. இதனால் முதல் முறையாக டெஸ்ட் தொடரை வெற்றிபெறும் முனைப்பில் இலங்கை அணியுள்ளது.

ராகுல்டிராவிட், வி.வி.எஸ். லக்ஸ்மன் ஆகியோரது துடுப்பாட்டம் இந்திய அணிக்கு பலம் சேர்க்கும். உலகின் தலை சிறந்த துடுப்பாட்ட வீரர் டெண்டுல்கர் இன்னும் 39ஓட்டங்கள் எடுத்தால் ஒரு நாள் போட்டியை சேர்த்து 30 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தவர் என்ற பெருமையை பெறுவார். சகீர்கான் நீண்ட இடைவேளைக்குப் பின் அணிக்கு வந்துள்ளார். அவரது வருகை பந்துவீச்சுக்குப் பலம் சேர்க்கலாம். இன்று டெஸ்ட் காலை 9.30மணிக்கு ஆரம்பமாகிறது.

## இலங்கை வீரர்களுக்கு உரிய பாதுகாப்பு இல்லை

இந்தியாவில் இலங்கை அணி வீரர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படவில்லையென அணியின் முகாமையாளர் பிரண்டன் குருப்பு தெரிவித்துள்ளார்.

தற்போது இந்தியாவுக்கு கிரிக்கெட் விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி வீரர்களுக்கு இந்திய கிரிக்கெட் நிர்வாகம் சரியான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள தவறியுள்ளதாக அவர் விசனம் தெரிவித்துள்ளார்.

, கடந்த நொட்களாக அணியினர் மும்பை நகரில் தங்கியுள்ளதாகவும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் திருப்தி கொள்ள முடியாதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு சில பொலிஸ் அதிகாரிகளைத் தவிர வேறு பாதுகாப்பு வசதிகள் இல்லை எனவும் குறிப்பாக பாதுகாப்பு வாகனங்கள் வழங்கப்படவில்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

லாகூரில் இடம் பெற்ற தாக்குதலைப் போன்ற தொரு தாக்குதல் நடத்தப்படக்கூடிய வாய்ப்புகள் தற்போதய பாதுகாப்பு ஏற்பாடுகளில் காணப்படுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஆங்கில மொழியை சரளமாகப் பேசக்கூடிய பாதுகாப்பு உத்தியோகத்தர்களை 24 மணித்தியாலமும் ஈடுபடுத்தப்பட வேண்டுமென பிரண்டன் குருப்பு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## எனது இறுதி வெளிநாட்டுத் தொடர்; வெற்றியுடன் முடிக்க விரும்புகின்றேன்

### முரளிதரன் பேட்டி

(அகமதாபாத்)

இலங்கை கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது.

இந்திய இலங்கை அணிகளிடையே3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டி அகமதாபாத்தில் இன்று ஆரம்பமாகியது.

இது தொடர்பில் இலங்கை சுழற்பந்துவீச்சாளர் முரளிதரன் நேற்றுமுன்தினம் அளித்த பேட்டியில், நான் போதுமான அளவிற்கு கிரிக்கெட் விளையாடிவிட்டேன். இது எனது கடைசி வெளிநாட்டு விளையாட்டுத்தொடராக இருக்கலாம்.

இலங்கை அணி இதுவரை இந்திய மண்ணில் டெஸ்ட் தொடரில் வெற்றிபெற்றதில்லை. அதை முடிபிற்கு கொண்டுவர விரும்புகின்றேன். இந்த முறை இலங்கை அணி இத்தொடரை வென்றால் அது சிறப்பானதாக இருக்கும் என்றார்.

## 63 வயதில் சதம் விளாசி கின்னஸ் சாதனை பதிவு

(சூரத்)

உள்ளூர் கிரிக்கெட் போட்டியில் சதம் அடித்த 63 வயது இந்திய வீரர் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார்.

குஜராத் மாநிலம் உமர்காமைச் சேர்ந்தவர் நேவிலி வாடியா. 63 வயதாகும் இவர், கிரிக்கெட் மீது அதிக ஈடுபாடு கொண்டவர். இவர் வதோதராவில் கடந்த மார்ச் 28 ஆம் திகதி நடந்த மைனர் இருபது-20 போட்டியில் பங்கேற்றார்.

இப் போட்டியில் வாக்ஹோடியா ரோட் மற்றும் ராஜ்தாம் வாட்லி பரிவார் ஆகிய உள்ளூர் அணிகள் மோதின. வாக்ஹோடியா அணி சார்பில் களமிறங்கிய வாடியா 60 பந்துகளில் 105 ஓட்டங்களை விளாசினார்.

இதில் 3 சிக்ஸர்கள் மற்றும் 15 பவுண்டரிகள் அடங்கும். இதன் மூலம் மிக அதிக வயதில் (63 ஆண்டுகள் 305 நாள்கள்) சதம் அடித்த வீரர் என்ற உலக சாதனை படைத்தார்.

இவரது சாதனையை உறுதி செய்த கின்னஸ் உலக சாதனை நிறுவனம் கடந்த 11 ஆம் திகதி சான்றிதழ் வழங்கியுள்ளது.

# இந்தியக் கிரிக்கெட் அணியில் சச்சினுடன் மகன் ஆட வேண்டும்

## அஞ்சலி சச்சின் விருப்பம்

(புதுடில்லி)

கிரிக்கெட் போட்டியில் தனது கணவர் சச்சினுடன் மகன் அர்ஜுன் இணைந்து விளையாட வேண்டும் என மனைவி அஞ்சலி விருப்பம் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர். இவர் சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமாகி நேற்றுடன் 20 ஆண்டுகள் நிறைவு பெற்றது. இந்த இனிமையான தருணத்தில் அவரது மனைவி அஞ்சலி தனது மலரும் நினைவுக்ளை இங்கே பகிர்ந்து கொள்கின்றார்.

**முதல் சந்திப்பு**

கடந்த 1990 இல் எனது அம்மாவை வரவேற்க மும்பை விமான நிலையம் சென்றிருந்தேன். இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் தனது முதல் சதம் கடந்திருந்த சச்சின் அங்கு வந்திருந்தார். அவர் தான் சச்சின் என எனக்குத் தெரியாது.

அப்போதுதான் இருவரும் ஒருவரையொருவர் முதல் முதலாகப் பார்த்துக் கொண்டோம். அன்று ஆரம்பமான எங்கள் காதல் ஐந்து ஆண்டுகள் நீடித்தது.

**கிரிக்கெட் தெரியாது**

அவரை முதலில் பார்த்தபோது எனக்குக் கிரிக்கெட் குறித்து எதுவும் தெரியாது. அதன் பின்னர் களத்தடுப்பு வியூகம் உட்பட எல்லாவற்றையும் தெரிந்து கொண்டேன். இதன் பின் கடந்த 1995 இல் நியூசிலாந்து தொடருக்கு முன்பு எங்கள் திருமணம் நடந்தது.

திருமணத்திற்குப் பின் நான் வீட்டில் கிரிக்கெட் குறித்து விவாதிப்பதை அவர்விரும்பமாட்டார். ஆனால் ஓய்வு நேரங்களில் அவரிடம் கிரிக்கெட் மற்றும் அது தொடர்பான விடயங்களைப் பேசுவேன்.

**வருத்தப்படவில்லை**

நான் சச்சினை திருமணம் செய்யாமல் இருந்திருந்தால் உண்மையில் முழுநேர டாக்டராகியிருப்பேன். அவர் என்னை அதிகம் சார்ந்திருப்பதால் இல்லத்தரசியாக இருக்க முடிவு செய்தேன்.

ஆரம்ப காலத்தில் சச்சினுக்கு ஆதரவாக அவரது அண்ணன் அஜித் இருந்தார். சச்சினுக்காக நிறைய தியாகம் செய்தார். அதைத் தான் நான் இப்போது செய்து கொண்டுள்ளேன்.

இரண்டு குழந்தைகள் உள்ளதால் டாக்டர் பணியைத் தொடர முடியவில்லை. இதற்காக வருத்தப்படவில்லை.

**சமாளிப்பது எளிது**

சச்சினை எனக்கு 19 வயதிலிருந்தே தெரியும். ஒரு நல்ல தோழியாக அல்லது மனைவியாக அவரை நன்கு புரிந்து கொண்டுள்ளேன். ஆனாலும் எங்கள் குழந்தைகள் உட்பட மொத்தக் குடும்பமும் அவரைப் புரிந்து கொண்டு எளிதாகச் சமாளிக்கின்றோம்.

**சச்சின் ஏமாற்றம்**

சச்சின் ஒரு ஓட்டம் அல்லது 10. ஓட்டம் அல்லது 100 ஓட்டங்கள் என எவ்வளவு ஓட்டங்கள் எடுத்தாலும் சரி நான் மகிழ்ச்சியடைவேன். ஏனெனில் இதற்காக அவர் எவ்வளவு முயற்சிக்கின்றார் என எனக்குத் தெரியும்.

அணி தோல்வி அல்லது வெற்றியடையும் போது அவருக்கு என்ன விளைவு ஏற்படும் என்பதும் எனக்குத் தெரியும். சமீபத்தில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக ஹதராபாத்தில் இந்திய அணி தோல்வியடைந்த போது மிகவும் ஏமாற்றம் அடைந்தார்.

**அர்ஜுன் வாய்ப்பு**

எனது கணவர் சச்சினுடன் (36 வயது) மகன் அர்ஜுன் (10 வயது) இணைந்து போட்டிகளில் பங்கேற்க வேண்டும் என நினைத்துப் பார்த்ததுண்டு. இது உண்மையில் நடப்பதற்கு வாய்ப்பில்லை. ஒரு வேளை அப்படி நடந்தால் அது மிகவும் பிரமாதமாக இருக்கும்.

**அசைய மாட்டேன்**

சச்சின் ஆட்டத்தை நேரடியாகப் பார்க்காமல் வீடியோவில் பார்ப்பதாகக் கூறுவது தவறு. மைதானங்களுக்குச் சென்று போட்டிகளைப் பார்ப்பதில்லை. வீட்டிலிருந்தபடி எனக்கு ராசியான இடத்தில் அமர்ந்து ரீ.வியில் நேரடியாகப் பார்ப்பேன்.

எனது கண்கள் அவ்வப் போது அருகில் இருக்கும் விநாயகரையும் பார்த்துக் கொண்டிருக்கும்.

சச்சின் களத்தில் ஆடும்போது நான் தண்ணீர் குடிக்கவோ உண வருந்தவோ மாட்டேன்.

அவர் ஆட்டமிழக்கும் வரை யாரிடமும் தொலைபேசியில் பேச மாட்டேன்.

மொத்தத்தில் அந்த இடத்தை விட்டு அசையக் கூடமாட் டேன் என்றார்.



# பயண அனுமதியின் தற்போதைய நிலை என்ன? தவறான செய்திகளால் பொதுமக்கள் குழப்பம்

(யாழ்ப்பாணம்)

'பயண அனுமதி' தொடர்பில் தவறான செய்திகள் மக்களை குழப்பி அவர்களை ஆற்றலைக்கின்றது. இது தொடர்பில் வலம்புரி சரியான தகவலை வெளியிட்ட போதிலும் அதனை குழப்பும் முயற்சிகளும் தொடர்கின்றன. எனவே அது தொடர்பான விளக்கம் ஒன்றைத்தருவது அவசியம் என்ற வகையில் சம்மந்தப்பட்ட தரப்புகளுடன் தொடர்பு கொண்டு அறிந்த விடயங்கள் இங்கு தரப்படுகின்றன.(ஆ-ர்)

வெளிமாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருபவர்கள் பாதுகாப்பு அனுமதி எதுவும் பெறவேண்டியதில்லை. தங்களுடைய தேசிய அடையாள அட்டையின் இரண்டு போட்டோப்பிரதிகள் அல்லது கடவுச்சீட்டின் இரண்டு போட்டோப்பிரதிகளை வவுனியா சோதனைச் சாவடியில் கையளிப்பதன் மூலம் அவர்கள் யாழ்ப்பாணத்துக்கான பயணத்தை மேற்கொள்ள முடியும்.

கொழும்பில் செய்த பொலிஸ் பதிவின் பிரதியும் இப்போது காண்பிக்கப்பட வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

பயணத்தை மேற்கொள்ளும்போது படையினரிடம் கையளித்த தேசிய அடையாள அட்டை போட்டோப்பிரதி ஒன்றில் படையினர் இறப்பர் முத்திரை பதித்து பயணியிடம் கையளிப்பர்.

குறித்த பயணி யாழ்ப்பாணத்திலிருந்து மீண்டும் வெளிமாவட்டத்துக்குச் செல்லும் போது அந்தப் போட்டோப் பிரதியை காண்பித்து தனது பயணத்தை மேற்கொள்ள முடியும்.

இந்த நடைமுறை யாழ். மாவட்டத்தை தற்போதும் வதிவிடமாகக் கொண்டவர்களுக்கு பொருந்த மாட்டாது.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இங்கிருந்து வெளிமாவட்டங்களுக்கு செல்வதாயின் வழமை போன்று பயண அனுமதி (Clearance) பெற்றிருக்க வேண்டும். இது பற்றிய தெளிவான செய்தியை வலம்புரி ஏற் கனவே வெளியிட்டிருந்தது.

எனினும் தவறான சில செய்திகளால் ஒரு சிலர் குழப்பமடைந்து-பயண அனுமதியின்றி வெளிமாவட்டங்களுக்கு செல்வதற்காக யாழ். புகையிரத நிலையத்துக்குச் சென்று ஏமாற்றத்துடன் வீடுதிரும்பியதும் நடந்த உண்மை.

தேவைப்பட்டால் திருப்பி அனுப்பப்பட்டவர்களின் புகைப்படத்துடன் அவர்களின் செவ்வியை பிரசுரிக்க வலம்புரி ஒருபோதும் தயங்கமாட்டாது அதேநேரம் கிளியரன்ஸ் இல்லாமல் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும் புக்குச் சென்றதாக வெளிவந்த செய்திகள் முற்றிலும் தவறானவை. இந்தச் செய்திகள் குறித்து யாழ். அரச அதிபரும் பலாலி படைத்தளபதியும் உண்மை நிலையை வெளிப்படுத்தவேண்டும்.

அதேநேரம் பயண அனுமதி இன்றி யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் வெளிமா வட்டங்களுக்கு பயணத்தை மேற்கொண்டிருந்ததால் வடபிராந்திய போக்குவரத்துச்சபைபிரதம அதிகாரி க.கணேசபிள்ளை அவர்கள் குடாநாட்டின் அனைத் துப் பத்திரிகைகளுக்கும் அதை உறுதிப்படுத்த வேண்டும்.

இல்லையேல் அவரை செய்தி மூலமாக வைத்து வெளியிடப்படும் தவறான செய்திகளை அவர் மறுக்க வேண்டும். யாழ்ப்பாண மக்கள் தவறான பாதையில் வழிப்படுத்தப் படுவதை 'கற்றவர்கள்' என்று பெயரெடுத்த யாழ்ப்பாண சமூகம் ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது.

எவரும் எப்படியும் ஏமாற்றலாம் என்ற கொடிய நிலை அறுத்தெறியப்பட வேண்டும். சரியான தகவல்கள் சென்றடைவது உறுதிப் படுத்தப்படுவது மிகவும் அவசியமானது.

அதேநேரம் செய்திகள் தவறாக வெளிவருவதும் தவிர்க்க முடியாதது. அப்படியான நிலைமையில் அதன் உண்மை நிலையை வெளிப்படுத்தி எங்களை நம்பியிருக்கும் வாசகர்களை வழிப்படுத்துவதே பத்திரிகை தர்மம். அதைவிடுத்து விட்ட செய்தித்தவறை மூடி மறைப்பதற்கு இன்னும் புல தவறான-திரிபான தகவல்களை வெளிப்படுத்துவது நீதியாகாது.

அதேநேரம் பயண அனுமதியின்றி யாழ்ப்பாணத்திலிருந்து பலர் கொழும்புக்குச் சென்றிருந்தால் ஒரு பகுதியினரிடம் கிளியரன்ஸ் கேட்கப்பட்டுள்ளதென்பது உறுதியாகின்றதல்லவா?

கிளியரன்ஸ் நடைமுறை முற்றாக இல்லாதிருந்தால், பயணிகள் முழுப்பேரும் கிளியரன்ஸ் இன்றி-சாதாரண சோதனையுடன் வெளிமாவட்டத்துக்கான பயணத்தை மேற் கொண்டிருக்க வேண்டும்.

எனவே இது விடயத்தில் யாழ்.அரச அதிபரும் பலாலிபடைத்தளபதியும் சரியான நடைமுறையை மக்களுக்கு வெளிப்படுத்துவது அவசியம். இல்லையேல், படையினர்-பத்திரிகையாளர்கள்-வடபிராந்திய போக்குவரத்துச் சபையை சேர்ந்தவர்களின் செல்வாக்கிருந்தால் யாழ். மாவட்டத்தை தற்போது வதிவிடமாக கொண்டவர்கள் கிளியரன்ஸ் இல்லாமல் வெளிமா வட்டங்களுக்கு செல்ல முடியும் என்ற கருத்து பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டு விடும்.

இவையெல்லாவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் தார்மீகப் பொறுப்பு யாழ். அரச அதிபருக்கும் பலாலிபடைத்தளபதிக்கும் உண்டு.

எதுவாயினும் யாழ்ப்பாணத்திலிருந்து ஏ-9 பாதையால் பயணிப்பதற்கான பயண அனுமதி (கிளி யரன்ஸ்) முற்றாக நீக்கப்பட வேண்டும் என வலம் புரி தனது ஆசிரியர் தலை யங்கத்தில் பல தடவை சுட்டிக்காட்டியிருந்தது. அது நடைமுறைக்கு வரவேண்டும் என்பதே எமதுவிருப்பமாகும்.

## ஆசிரியர் விடுதலை

(கொழும்பு)

படையினரால் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்ட திருநெல்வேலியைச் சேர்ந்த ஆசிரியர் பு.தயான் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

படையினர் மேற்கொண்ட விசாரணையின் போது பிரஸ்தாப ஆசிரியர் குற்றச்சாட்டுகளுடன் தொடர்பற்றவர் என்பது தெரியவந் ததையடுத்து படையினர் அவரை விடுதலை செய்துள்ளனர். (ந)

## அவுஸ்திரேலி...

ளது. சர்வதேச சட்டங்களுக்கு அமைவான முறையில் புகலிடம் கோருவோர்களுக்கு தஞ்சம் அளிக்கப்படுமென அவுஸ்திரேலிய குடிவரவு,குடியகல்வு அமைச்சர்கிறிஸ்ஏவன்ஸ் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நன்மைகளை அடையும் நோக்கில் அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிப்போருக்கு அடைக்கலம் வழங்கப்படமாட்டாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை கொழும்பிற்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட்ட 30பேரின் பெயர் விபரங்கள் இதுவரையில் வெளியிடப்பட வில்லை.

படகு மூலம் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசித்த 119 இலங்கையர்கள் இந்த ஆண்டில் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## சர்வதேச அழுத்...

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 19வது தேசிய மாநாடு நேற்று கெந்தராமையில் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது. இம்மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த நாட்டு மக்களுக்கு ஜனாதிபதித் தேர்தல் தேவையா? பொதுத் தேர்தல் தேவையா? என்பதை அவர்களே தீர்மானிக்கட்டும்.

இரு தேர்தல்களுக்கும் இன்னும் காலமிருப் பதால் தேவையான போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆராய்ந்து அதனை அறிவிக்கும்.

நாம் யாருக்கும் பயப்பட மாட்டோம். மறைந்த எமது தலைவர்கள் யாருக்கும் பயந்து கொண்டு தீர்மானங்களை எடுக்கவில்லை.நானும் அப்படித்தான். சர்வதேச அழுத்தங்களுக்கு பயப்படப்போவதில்லை.

எதிர்க்கட்சியினர் ஜனாதிபதி வேட்பாளருக்கு பிச்சை எடுக்கிறார்கள்.இன்று நாட்டிலிருப்பது அரசியல் எதிர்க்கட்சியல்ல; நாட்டிற்கு எதிரான எதிர்க்கட்சி.

ஜனநாயகத்திற்காக மக்களுக்காக பாடுபடக்கூடிய எதிர்க்கட்சியினர் நாட்டிற்குத் தேவை.நாட்டைக்காட்டிக் கொடுப்பவர்கள் நமக்கு வேண்டாம்.

நாம் எந்த சவாலையும் முறியடிக்க காத்திருக்கிறோம்.நாட்டின் எதிர்காலம் நமக்குத் தேவை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

இம்மாநாட்டில் ஜனாதிபதி தமிழிலும் தனது உரையை ஆற்றினார். இதேவேளை இம்மாநாட்டில் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள், உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும் சுமார் 35 நாடுகளைச் சேர்ந்த ராஜதந்திரிகளும் கலந்து கொண்டனர். (ந-5)

## பொன்சேகாவின் பதவி விலகலுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பதில் கடிதம்

கூட்டுப்படைத் தலைமை அதிகாரி சரத் பொன்சேகா ஜனாதிபதியின் மீதும் அரசாங்கத்தின் மீதும் நம்பிக்கை இழந்ததன் காரணமாகவே அவரை உடனடியாக பதவியிலிருந்து ஓய்வு கொடுக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

தமது பதவி ஓய்வைக்கோரி சரத் பொன்சேகா அனுப்பியிருந்த கடிதத்திற்கு அனுப்பிய பதில் கடிதத்திலேயே ஜனாதிபதியின் செயலாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தக் கடிதத்தை நேற்று அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்டிருந்தது. அதில் கடந்த 12ஆம் திகதி சரத் பொன்சேகாவில் பதவி ஓய்வு கோரிய கடிதம் கிடைக்கப்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் ஏற்கனவே ஓய்வு திகதிக்கு மேலதிகமாக நான்கு வருடங்கள் பதவியிலிருந்த நிலையில், தாமதமின்றி சரத் பொன்சேகாவின் ஓய்வு கோரிக்கையை ஏற்றுக் கொண்டதை ஜனாதிபதி தமக்கு அறிவித்ததாக ஜனாதிபதியின் செயலாளர் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

எனவே சரத் பொன்சேகா கருத்து உடனடியாக இலங்கை இராணுவத்திலிருந்து ஓய்வு பெறுமாறும் கூட்டுப்படைத் தலைமையதிகாரி பதவியிலிருந்து உடனடியாக விலகுவதை அனுமதிக்குமாறு ஜனாதிபதி தமக்கு அறிவிக்குமாறு தனக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்

இதேவேளை சரத் பொன்சேகா விற்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் அச்சுறுத்தலின் அளவிற்கு ஏற்ப வழங்கப்படுமென்றும் லலித் வீரதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

## புலனாய்வுப்...

தொடர்ந்து அதன் புதிய கட்டளை அதிகாரியாக கேணல் அருணா வன்னியாராட்சி நியமிக்கப்பட்டுள்ளார்.

கருணா சேகரவிற்கு பயிற்சிகளை வெளிவிவகார அமைச்சுவழங்கிவருவதைத்தொடர்ந்து அவர் தற்போது இராணுவத் தலைமையகத்தில் பணியாற்றி வருகின்றார். வன்னியா ராட்சி அடுத்தவாரம் தனது பதவிகளை ஏற்கவுள்ளார். (ந)

## பொதுத் தேர்தலே முதலில்...

தேர்தலை நடத்து வதனை விடவும் பொதுத் தேர்தலை நடத்து வது பொருத்தமானதென சிரேஷ்ட அமைச்சர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சர்வதேச சமூகம், புலம்பெயர் மக்கள், தமிழ் அரசியல் கட்சிகள், ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட தரப்பினர் அகதிகள் பிரச்சினையை முதனிலைப்படுத்தி பிரசாரம் மேற்கொள்ளக் கூடுமெனக் குறிப்பிடப்படுகிறது.

இடம்பெயர் மக்களை மீள் குடியேற்றும் நடவடிக்கை எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள் பூரணப்படுத்த முடியும் எனவும் அதன்பின்னர் தேர்தல்களை நடத்துவது அரசாங்கத்திற்கு சாதகமான சூழ்நிலையை உருவாக் கக் கூடும் எனவும் கருதப்படுகிறது.

பொதுத் தேர்தலை முதலில் நடத்துவதன் மூலம் ஜே.வி.பி. கட்சியின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தையும் குறைக்க முடியும்.

கிழக்கில் மேற்கொண்டதனைப் போன்று விடுதலைப் புலிகளின் முன்னைய உறுப்பினர்களை வன்னியில் அரசியல் பணிகளில் ஈடுபடுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதன்படி எதிர்க்கட்சிகளின் விரிவான திட்டங்களை குழப்பும்வகையில் தேர்தல்கள் தொடர்பில் மாறுபட்ட அறிவிப்பொன்று விடுக்கப்படக் கூடுமென குறித்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. (ந-5)

## வடக்கில்...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உறவினரான சியாமல் ராஜபக்ஷவிற்கும் ஸ்டீபன் ரெப்பிற்கு மிடையில் மிக நெருங்கிய தொடர்பு காணப்பட்ட தாக தெரிவிக்கப்படுகிறது. சியாமல் ராஜபக்ஷவின் மேலதிகரியாக ஸ்டீபன் ரெப்கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ராஜபக்ஷ சகோதரர்கள் இது தொடர்பில் சியாமல் ராஜபக்ஷவிடம் தாம் தகவல்களை திரட்டிக் கொண் டதாக ஸ்டீபன் ரெப் தெரிவித்துள்ளார். (ந-5)

## தமிழ் மக்களின் பிரச்சினை...

போன்றன தொடர்பில் ஐ.நா அதிக அழுத்தங்களை மேற்கொள் ளத்திட்டமிட்டுள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதி பான்கீ மூனின் மனிதாபிமான விவகாரங் களுக்கு பொறுப்பான பிரதிநிதி ஜோன் கோம்ஸ் கொழும்பு வருகை அதன் ஒரு அங்கமாகவே கருதப்படுகிறது.

ஐ.நாவின் செயலாளர் நாயகத் திற்கும், அரசியல் விவகாரங்களுக்கு பொறுப்பான பிரதிநிதி லியான் பொஸ்கோவிற்கும் இலங்கை அரசு அளித்திருந்த உறுதி மொழி களின் நடைமுறைகள் தொடர்பாக ஆராய் வது ஜோன்கோம்ஸின் பயணத்தின் முக்கிய நோக்கமென ஐ.நாவின் பிரதிப்பேச்சாளர் மாரி ஒகபே தெரிவித்திருந்தார்.

இடம்பெயர்ந்த மக்கள் தங்கி யுள்ள முகாம்கள் மற்றும் மக்கள் மீள்குடியேற்றப் பட்டுள்ள பிரதேசங் கள் போன்றவற்றிற்கு பயணங்களை மேற்கொள்ளும் ஜோன்ஸ் கோம்ஸ் அது தொடர்பான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

## இராமாவில் முகாமில் உள்ள...

வர்களில் திருகோணமலை மாவட்டத்தை சொந்த இடமாகக் கொண்ட 39குடும்பங்களைச் சேர்ந்த 118பேரும், மட்டக்களப்பு மாவட்டத் தை சொந்த இடமாகக் கொண்ட 20 குடும்பங்களைச் சேர்ந்த 54பேரும், புத்தளம் மாவட்டத்தை சொந்த இடமாகக்கொண்ட 11குடும்பங்களைச் சேர்ந்த 34பேரும் அடங்குவர்.

இம் மக்களை அடுத்தவாரம் அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

அத்துடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை சொந்த இடமாகக் கொண்ட 624குடும்பங் களைச் சேர்ந்த 2010பேர் இராமாவில் முகாமில் தங்கல்வக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை உறவினர்கள் பொறுப் பேற்க முன்வந்தால் அனுமதி வழங்கப்படுமென யாழ். அரச அதிபர் க.கணேஷ் மேலும் குறிப்பிட்டார். (ந-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.